# அலை ஓசை



Jan - Feb 1993

அலை 8 ஓசை 1

லண்டனில் இருந்து வெளிவரும் தமிழ்ச் சஞ்சிகை

KUMARANS

குமரன்ஸ்

தமிழ்க் கடை

Walthamstow
142, Hoe Street,
Walthamstow
London E17 4QR
TEL: 081 521 4955
FAX: 081 521 9482

Central London
69, Holloway Road,
Highbury & Islington,
London N7 8JZ
TEL: 071 - 609 1912
FAX: 071 - 609 0501

Sri Lankan Off Licence

TILKO

PROPERTY SERVICES

ESTATE AGENTS, LETTING MANAGEMENT
PROPERTY MAINTENANCE, FINANCIAL CONSULTANTS


Selling, Letting
Financial Problems?
Let us solve them
DHSS - Tenents wellcome

We Care and it Shows

252 Hoe Street
Walthamstow
London E17 3AX
Tel: 081 - 520 9968
Fax: 081 - 503 7661

1 Station Parade
High Street North
Eastham E6 1JD
Tel: 081 - 472 0029
Fax: 081 - 503 5996

# காலத்தால் அழியாத காவிய நாயகன்



16.1 .1993. உலகத்தமிழர்களின் வரலாற்றில் குறிப்பாக ஈழவர்களின் வரலாற்றில் ஓர் மறக்க வொண்ணாத சோகநாள். ஆமாம். தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினரும் முன்னாள் யாழ் பிராந்தியத் தளபதியும் விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகத்தின் பொறுப்பாளரும் சிறந்த ராஜ தந்திரியுமான கிட்டு என பிரபல்யமாக அழைக்கப்படும் கிருஷ்ணகுமாரும் அவருடன் 9 போராளிகளும் சர்வ தேசக்கடலில் அந்தியக்கடற்படையினரால் வழி மறிக்கப்பட்டு கப்பலுடன் எரிக்கப்பட்டுக் கொல்லப்படனர் என்ற சேதி எம்மை அடைந்த நாள். தமிழர்களின் நிரந்தர அமைதிக்காய் தன்னுயிரை மதிக்காது ஆழ்கடலினூடு சமாதான முயற்சிக்காய் ஈழம் வந்து கொண்டிருந்த போது இச்சதி பாரதத்தால் ஏற்படுத்தப்பட்டது. என்றுமே தமிழ ஈழ மக்களின் விடிவுக்குத் தடைக்கல்லாக நிற்கும் பாரதம் இங்கும் தன் நய வஞ்சகத்தை வெளியிடத் தயங்கவே இல்லை. சர்வ தேசமெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்கவர்ந்த இந்த 33 வயது இளைஞன் கிட்டு யாரிவன்?

ஈழவரலாற்றில் சிங்களப்படையை யாழ்நகரினுள் நுழைய விடாது தடுத்து நிறுத்தித் தமிழீழம் என்பது கனவல்ல அது நனவடையக்கூடியது என உறுதிப்படுத்தியவன் இவன். பெண்களின் விடுதலைக்காய் சுதந்திரப்பறவைகள் என்ற புனித இயக்கத்தின் ஸ்தாபகன். சீமையிலும் சுவிசிலும் இருந்து கொண்டே செஞ்சோலை என்னும் பிஞ்சுகளின் இல்லத்திற்கு உரமிட்டவன். புனர்வாழ்வுக கழகத்திற்கு மீண்டும் புத்துயிர் தந்த பெருமகன்.

சிறிது காலம் நீ சீமையில் இருந்தாலும் நெடு நாளைய நண்பனின் பிரிவு போல் எம் இதயத்தைப் பிழிந்து கொண்டிருக்கிறாய்.

விடுதலைத் தீயில் புடம் போட்டு எடுத்த கட்டித் தங்கம் நீ. மண் மீட்கும் பணியில் மடிந்து போன மாவீரர் வரிசையில் துருவ நட்சத்திரமாய் முன்னின்று துலங்கும் மணி முத்து நீ. அங்கம் இழந்தும் நீ எள்ளளவும் கலங்காது அன்னை தமிழன்னையை ஈழத்தின் அரியணையில் ஏற்று வேன் என்று சபதமிட்டுக் கடல் கடந்த நாடுகளில் எல்லாம் தமிழர்களின் பிரச்சனையை பிரச்சாரப் படுத்தி அல்லும் பகலும் உழைத்தவன் நீ. ஆமாம். தமிழீழம் என்னும் எத்தனையோ தடைகளைத் தாண்டியே மிளிர வேண்டும் என்ற காலனின் கணிப்புக்கிணங்க அன்று உன் தலைக்கு வீசிய

பாசக்கயிற்றை காலால் எடுத்த காலகாலன் நீ. மோட்டார் வண்டியில் செல்கையில் நீ மரணத்தை முத்தமிட்டிருந்தால் தமிழீழம் பற்றிய பேச்சு சர்வ தேச அரங்கில் குடத்தில் இட்ட விளக்காய் இருந்திருக்கும். முப்பத்தி மூன்று வயதில் முதிர்ச்சியின் எல்லையில் நின்று விளக்கம் கொடுத்தவன் நீ.

ஓர் போராளியாய், தானைத்தளபதியாய் தமிழீழ அரசாங்கத்தையே நிர்வகிக்கும் பிரதம நிர்வாகியாய், போர்நுணுக்கம் பல கற்ற போர்த் தந்திரியாய், தலை சிறந்த இராஜ தந்திரியாய், சித்திரகலைஞனாய், எழுத்தாளனாய் இன்னும் பல அவதாரங்களை உன்னுள் அடக்கி ஓர் சதாவதானியானாய்.

விழி மூடித்திறக்கையில் உன் மலரும் வதனம் வந்து வந்து நெஞ்சில் வேதனையைக் கொப்பளிக்கிறது. அக்கா, தம்பி, அண்ணை, மச்சான் என உடனும் முறை கூறி உரிமையுடன் அழைக்கும் உன் வினயம். குறை கூறுபவர்களின் குறை அறிந்து நிறை காணத் தீர விசாரித்து நயத்துடன் அவர்களை அணைத்துத் திருத்தும் நேரிய பண்பு. உன் அறிவு, அனுபவம், தீர்க்கமான பார்வை, என்ன சொல்லப் போகின்றாயோ என் ஏங்க வைக்கும் தீர்க்கமான நோக்கு. வயதில் மூத்தவர்கள் கூட உன்னை கிட்டண்ணை எனக் கூச்சமின்றி அழைக்க வைக்கும் அன்பு. குழந்தைகளுடனும் பாலர்களுடனும் பழகும் போது குழந்தையாக மாறும் உன் பண்பு மீண்டும்

கிட்டு மாமா எங்களுடன் எப்போது பேசுவார் என ஏங்கவைக்கும் பாசம்.

எப்பொழுது எங்கு எதைப்பார்த்தாலும அப்பொருளை எப்படி ஈழத்தில் பயன்படுத்தலாம் என அறிவதில் காட்டும் தீவிர தாய் நாட்டுப்பற்று. மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்ற கூற்றுக்கிணங்க மாற்றுப் பாசறையில் வளர்ந்த ஈழவர்களின் கலைத்திறனை அறிந்து ஈழத் தாயின் கலைத்தேவையை உணர்ந்து அவர்களின் விழாக்களிலும் விருப்புடனே பங்கேற்று அவர்களின் கலைத்திறனைப்பாராட்டி நீ அணைத்த பாங்கு. செய்யும் ஒவ்வொரு செயலிலும் ஓர் பூரணத்துவத்தைக் காணும் பிரியம்.

ஆங்கிலத்தை அன்னியருக்கிணையாகப் பேச வேண்டும் என்ற ஆவேசத்தில் மிகக்குறுகிய காலத்தில் சரளமாக உரையாடிப் பத்திரிகையாளர்களின் சரமாரியான கேள்விகளுக்குச் சாணக்கியமாய்ப் பதிலளித்தாய். அவர்தம் வினாக்களுக்கு விடையளிக்கும் போது இயல்பான விகடத்துடன் விவேகமாய்ப் பதிலளித்தாய்.

கொடுக்கும் வேலைகளைக் கருத்துடன் செய்யாவிடில் நீ காட்டும் சீற்றம், உன் சீற்றம் கண்டு நாம் நொந்திருந்த வேளை பரிவுடன் நீ கூறும் தேற்றம். ஆற்ற வேண்டிய பணியை ஆற்ற வேண்டிய நேரத்தில் ஆற்றி விட்டால் உளம் மகிழ்ந்து நீ போற்றும் பாங்கு. போற்றியோரையே உதாரணமாக்கி மற்றோரையும் கடமையில் ஈடுபட வைக்கும் மன ஊக்கம்.

நடுநிலை என்று கொட்டை எழுத்துக்களில் பொறித்து நம் தாய் நாட்டுப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் நாளிதழ்கள் மீது சீற்றம் கொண்டு " என்னையா நடுநிலை, ஒரு புனித மண்மீட்புப் போராட்டம் பல எதிரிகளையும் எட்டப்பர்களையும் தகர்த்தெறிந்து சீரிய வழியில் தமிழீழ மக்களின் இறுக்கமான அணைப்புடன் விடிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் வேளையில் அவற்றை ஊக்குவிக்க வேண்டிய பத்திரகையாளர்கள் ஊக்குவிக்காவிடினும் துரோகத்தனமாக வேலையில் ஈடுபடாதீர்கள். நடுநலை என்ற போர்வைக்குள் நின்று ஈழ விடுதலையைக் கொச்சைப்படுத்தாதீர்கள் எனக் கொதித்தெழுந்த வேகம்.

தனிமையில் காணும் போதெல்லாம் பத்திரிகைகளின் கடமை, காலமறிந்து எழுதும் கைவண்ணம், தாயக உண்மைச் செய்திகளை உடனுக்குடன் கடல கடந்து வாழும் தமிழரிடை பரப்ப வேண்டியதன் தார்ப்பரியம், தாயகம் மறந்த ஈழவர்களைத் தட்டி எழுப்ப வேண்டியதன் காரண காரியம், நிர்க்கதியாக நிற்கும் தமிழீழ மழலைகளின் மறு வாழ்வுக்கு முறையாக நிதி திரட்டி அவர்தம் கரம் தூக்கி விட வேண்டியதன் அவசியம். இன்னும் எத்தனை விடயங்களை உன் அறிவு அனுபவக்கண்ணோட்டத்துடன் உள்ளன்போடு போதித்தாய். அடிக்கடி மச்சான், மச்சான என்று என்று அன்போடு அழைத்து நாம் கேட்கத் தயங்கும் கேள்விகளுக்கு உளமுணர்ந்து புன்சிரிப்போடு உடனும் விளக்கம் தந்தாய்.

காலச்சக்கரம் வேகமாகத்தான் சுழல்கிறது. காக்கவென வந்த காந்தியின் படைகள் தலைமுறைக்கு தலையெடுக்க முடியாவண்ணம் தாக்கி அழித்துச் சென்றனர். பாரதத்தின் துரோகத்தால் தியாக தீபங்களான திலீபன், குமரப்பா, புலேந்திரன், அன்னை பூபதி, இன்னும் எத்தனை பேர் இன்னமும் தமிழீழ விடிவுக்காய் தொலைவானில் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றனர். பாரதத்தின் நயவஞ்சகத்தின் சிகரமாய் தானைத் தளபதியும் தமிழன்னையின் செல்வப்புதல்வனும் பிரபாவின் அன்புத் தம்பியும் சமாதான தூதுவனும் எம சிந்தை கவர்ந்தவனும் மாவீரனுமான கிட்டு அனலிடை அகப்பட்டு ஆழி மகளின் நீங்கா அரவணைப்பில் புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற தாரக மந்திரம் நாவினில் ஓத நீங்காத் துயில் கொண்டான்.

தீர்க்கதரிசனமோ, ராஜதந்திரமோ அற்ற சுயலாபங்கொண்ட பாரதத் தலைவர்கள் அவற்றுக்கெல்லாம் என்றோ ஒருநாள் பதில் சொல்லியே ஆக வேண்டும். தமிழ் ஈழப் போராட்டம் ஓர் உள் வீட்டுப் போராட்டமோ அன்றி மண்ணாசை கொண்டு ஆரம்பிக்கப் பட்டதோ அல்ல.

சிங்கள அரசின் அடக்கு முறைகள் ஒன்று திரண்ட போது மக்களின் மென்மையான இதயங்கள் நொந்து பொறுமையின் எல்லைக் கதவுகள் பொடிப்பொடியாக உடைந்து, சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ முடியாதென்ற ஓர்மம் நெஞ்சில் ஆழப்பதிந்து இறுக்கமுற், மாற்று வழியின்றி மண்மீட்பு என்னும் புதிய போராட்டத்தில் தமிழீழத்தாயகம் தான் முடிந்த முடிபென ஈழத்தமிழர்கள் அறுதியாக இறுதியாக இறங்கி விட்டனர். ஆயிரம் ஆயிரம் இதயங்களின் புனித இரத்தத்தால் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் இப்புனித போராட்டம் பரிணாமமுற்றுத் தமிழீழம் என்ற தீங்கனி கனியும் நாள் வெகு தொலைவில் இல்லை.

தன்னைப்புடம் போட்டு தியாகத்தீயில் மெழுகாகிய தானைத்தளபதிக்கும் ஏனைய வீர வேங்கைகளுக்கும் ஈழப்போருக்கு என்றென்றும் நீளக்கரங்கொடுக்கும் அலை ஓசையின் தாளப்பணிந்த அஞ்சலிகள்.

ஆசிரியரின்

# யாழ் பயணக்கட்டுரை

சென்ற இதழின் தொடர்ச்சி

வாசகர்களுக்கு, எனது யாழ் பயணக்கட்டுரை பற்றிச் சென்ற இதழில் தொகுத்து எழுதியிருந்தேன். நான் சென்று வந்த பின்னர் வவுனியாவில் இருந்து யாழ் செல்லும் பாதை இன்னமும் ஆபத்து மிகுந்ததாகவும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருளில் வள்ளத்தில் மின்னல் வேகத்தில் செல்ல வேண்டிய நிலையில் இருப்பதாக அண்மையில் அங்கிருந்து வந்த பயணி ஒருவர் கூறினார். ஆமாம் அது தான் கிளாலிப் பாதை. மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வருகின்றேன்.

## புதிய திடீர்க் கடைகள் திறப்பு

யாழ் நகரில் பிரதான வீதிகளில் உள்ள வீடுகளின் முன் சிறு பெட்டிக்கடைகள் திறக்கப்பட்டுள்ளன. ஒரு மேசை ஒரு கதிரை போட்டு வியாபாரம் சுமாராக நடக்கிறது. சில மண்ணெண்ணெய்ப் போத்தல்கள், தேங்காய் எண்ணெய்ப் போத்தல்கள், வாழைப்பழக்குலை, Lemon Puff பிஸ்கட், மற்றும் சில சில்லறைச் சாமான்களைப் போட்டு வியாபாரம் நடாத்துகிறார்கள்.

வேறு சிலர் சவர்க்காரங்கள், பக்கற்றில் அடைத்த பால்மா, பிஸ்கட் பற்றறி மற்றும் யாழ்ப்பாணத்தில் வாங்க முடியாத, அதாவது கொழும்பில் இருந்து இராணுவத்தின் கண்களில் மண்ணைத் தூவி விட்டுக் கொண்டு வந்த பொருட்களை வெகு கிராக்கியோடு விற்கிறார்கள். ஆனால் விலைகள் தான் கட்டுப்படியாகாதவை.

## தமிழ் மொழி பெயர்ப்புக்களுடன் கூடிய ஆங்கிலப்படங்கள்

முன்னரைப்போல் ஆபாசப்படங்கள் காட்டுவது இப்போது புலிகளால் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. வீரப் போராட்டங்கள மூலம் வெற்றி பெற்ற நாடுகளின் போராட்ட வரலாறு, மேலைத்தேய நாடுகளின் ஆயுதப் போராட்ட முறைகள், ஆயுதப் பாவனைகளில் வெளிநாடுகளின் வளர்ச்சி ஆகியனவற்றைச் சித்தரிக்கும் பல ஆங்கிலப் படங்கள் அங்கு திரையிடப்படுகின்றன. தமிழ் எழுத்துக்களுடன் (Tamil Sub Titles) இப்படங்கள் திரையிடப்படுகின்றன. இங்கு ஆச்சரியம் என்னவென்றால் இளைஞர்களுக்குச் சரி சமனாக யுவதிகளும் திரையரங்கத்தை நிறைத்தமையேயாகும்.

## சுத்த தமிழ்ப் பெயர்ப்பலகைகளுடன் யாழ்க் கடைகள்

சைவ அசைவ உணவகம், முடி திருத்தகம், உடை அழுத்தகம், குளிர்பான நிலையங்கள் இன்னும் பல கடைகள் சுத்த தமிழில் அழகிய பெயர்ப்பலகைகளைத் தாங்கிக் காட்சியளித்தன.

## கலாச்சாரப்பிரிவின் கசட் வெளியீட்டு விழா

கலாச்சாரப்பிரிவின் கசட் வெளியீட்டு விழா, யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கலாச்சாரப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் உட்படப் பல அறிஞர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள்.

## தனித்துவமாக இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

வட மாகாணத்திலுள்ள சகல மாவட்டங்களிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது பணிகளைத் துரிதமாகவும் இதர உள்நாட்டு வெளிநாட்டு நிதி நிறுவனங்களுடன் சேர்ந்தும் செயற்பட்டு வருகிறது. மற்றைய அகதி, புனர்வாழ்வு நிறுவனங்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனேயே செயற்பட்டு வருகின்றன. மிகத்துரித பணியாகக், குண்டு வீச்சு விமானங்கள் குண்டு போடும் இடங்களிலும் செல்லடி நடக்கும் வேளையிலும் பாதிப்புக்குள்ளாகும் மக்களை உடனுக்குடன் தங்கள் முதலுதவி வாகனங்களில் வைத்தியசாலைகளில் சேர்த்தும் இறந்தவர்களின் உடல்களை உறவினர்களிடம் சமர்ப்பித்தும் மற்றும் மக்களுக்கு உடனடி தேவையான மருந்துக்களை எங்கிருந்தாவது வரவழைத்துக் கொடுத்தும் பாரிய பணிகளைச் செய்து வருகின்றது. உடனடி உதவிக்கு அடுத்ததாக சற்று நீண்ட காலத்திற்குப் பயன் அளிக்கக்கூடிய அகதிகளுக்கான புனர் வாழ்வு, கைம் பெண்களுக்கான நெசவு மற்றும் தும்பு போன்ற

கைத்தொழில் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கிறது. கடல் கடந்து வாழும் நாங்களும் தங்கள் பணிகளில் பல விதமாக உதவிகள் புரியலாம் என கழகத்தின் பொறுப்பாளர் திரு நாதன் தெரிவித்தார். போர்க்காலத்தில் அனுதைகளாக்கப்பட்ட பிள்ளைகளைத் தத்து எடுப்பதன் மூலமோ( அதாவது இங்கிருந்து கொண்டே அவர்களது செலவுக்குப் புனர் வாழ்வுக் கழகத்தினூடு பணம் அனுப்பி அவர்களின் நலனைப் பராமரித்தல்) மற்றும் அவர்களது சிறிய திட்டங்களை நாங்களே பொருளாதார ரீதியில் ஆதாரமளித்தல் இன்னும் பல திட்டங்களை அவர் எடுத்துக் கூறினுர். கடந்த அலை ஒசை இதழில் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் பாரிய பணிகள் பற்றி விவரமாக எழுதி இருந்தேன்.

இடைக்கால அரசாங்கத்தை அமைக்கக்கூடிய வகையில் புள்ளி விபரங்களுடன் சாத்தியப்பட க்கூடிய முறையில் செயற்படும்

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம்

தமிழீழ வரைபடத்தின் ஒவ்வொரு சதுர அங்குலத்தையும் அக்கு வேறு ஆணி வேருக அலசி ஆராய்ந்து இன்றைய காலகட்டத்தில் அம்மண்ணில் இருந்து பெறக்கூடிய சகல வளங்களையும் பெறுவதற்கான முயற்சியையும், இதர நாடுகளிடமிருந்தோ அல்லது சிங்கள அரசிடம் இருந்தோ மிகக்குறைந்த உதவிகளைப் பெற்று நீண்ட காலத்திற்குப் பயன் அளிக்கக்கூடிய திட்டங்களைத் தீட்டுவதிலும் அவற்றை அமுல்படுத்துவதிலும், மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. போர்முனையில் நிற்கும் போர்வீரனின் வேகத்திற்கு இணையாக இவர்களின் செயற்பாடுகள் நாளொரு வடிவெடுத்து மக்களுக்கு உடனுக்குடன் பயன் அளிக்க வைக்கிறது எனலாம். மின்சாரத்திற்கான மாற்று உத்திகள், எரிபொருளுக்கான மாற்று வழிவகைகள், மிகக் குறுகிய கால பயிர்ச் செய்கைகள், விவசாயம், மீன்பிடி, பனை, தென்னை வள அபிவிருத்தி, மனித சக்தியின் செயற்பாடு, இதர மக்களுக்கு முன்மாதிரியாக தாமாகவே புதிய இன வளர்ப்புக்களை உண்டாக்கிப் பின் மக்களை அதனுடன் ஒன்றுபடச் செய்தல், தேவைக்கு மிஞ்சிய உடன் உணவுப் பொருட்களை உலர் உணவுப்பொருளாக்கிப் போர்க்காலங்களிலும் உணவுத் தட்டுப்பாட்டுக் காலங்களிலும் அவற்றை நுகரச் செய்தல் புதிய வகை பாண் கேக் மற்றும் திடீர்ச் சாப்பாடுகளைத் தயாரித்தல் இப்படி ஒவ்வொரு துறையிலும் அவர்களின் விஞ்ஞானத்தோடு ஒட்டிய சேவை மக்களை அவர்களுடன் ஒன்று படத் தூண்டுகின்றன. பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், கல்விமானகளும் தொழில் நுட்பவியலாளர்களும் மற்றும் அவ்வத்துறைகளில் கைதேர்ந்த நிபுணர்களும் ஒன்று கூடி இவ்வரிய பணியினைச் செவ்வனே செய்து வருகிறுர்கள். இவர்களது சிறந்த பணிகள் பற்றி நாம் பின்னர் ஆராய்வோம். அத்தோடு அவர்களை நான் சந்தித்த போது வெளிநாடுகளில் வாழும் எமது மக்கள் எந்தெந்த வகைகளில் தங்கள் தாய்நாட்டுக்குத் தங்கள் தூய பணிகளைச் செய்யலாம் என்பதையும் விளங்கப் படுத்தினர். வெளிநாடுகளில் வசிக்கின்ற மக்களின் ஒரு சிறு தொகையினர் தங்களுக்கு உதவினுலே போதும் தாங்கள் இமாலய சாதனைகள் செய்து விடுவோம் என்று கவலையுடன் பதிலளித்தனர்.

## திருத்தப்படாத நவீன சந்தைகள்

நவீன சந்தை மற்றும் அதனுடன் ஒட்டிய பல கடைகள் குண்டு வீசித்தாக்கி உருக்குலைந்த நிலையிலேயே சிறிது திருத்தங்களுடன் வியாபாரங்களை நடாத்தி வருகின்றன. அடிக்கடி நடைபெறும் குண்டு வீச்சுக்களுக்கு ஈடு கொடுப்பதற்காகவே தாங்கள் இப்படியே விட்டு விட்டதாக கடைக்காரர்கள் கூறினர். உழைக்கும் பணத்தின் பெரும்பகுதி கடைகளின் திருத்த வேலைகளுக்கே போய்விடுவதாகக் குறைப்பட்டுக் கொண்டனர். சீமெந்து கண்காட்சிப் பொருளாகி (விலை ஏற்றத்தால்) விட்டதும் இதற்கு முக்கிய காரணங்களாகும்.

## அறுபது வயதிலும் அபார ஓட்டம்

அறுபது வயது கடந்தும் பெண்மணிகள் சைக்கிளில் மிக இலாவகமாகப் பொருட்களையும் பின்னுல் ஏற்றிக் கொண்டு வேகமாகச் சைக்கிள் ஓடும் விதம் புறநானூற்றையும் விஞ்சவைக்கிறது. புறநானூற்றை மிஞ்சிய பல் செயல்கள் யாழ்ப்பாணத்தில் வெகு சாதாரணமாக நடைபெற்று வருகின்றன. முன்னுலும் பின்னுலும் பெரியவர்களையோ அன்றிச் சிறியவர்களையோ ஏற்றிய வண்ணம் பெண்மணிகள் எதிர்க்காற்றினூடு சைக்கிள் ஒடி வரும் விதம் சற்றுச் சிந்திக்க வைத்தது.

## பெல்முடி ஸ்பெசல்

சில சமயங்களில் யாழநகரத்தில் பெற்றோல துப்புரவாகவே வாங்க முடிவதில்லை. விவசாயம் செய்யும் கமக்காரர்கள் பெற்றோல் தட்டுப்பாட டால் படும் துயர் சொல்லுந்தரமன்று. இதனல விரக்தியடைந்த கமக்காரர் தமது அரிய முயற் சியினுல் பெற்றோல் இன்றியே நீரிறைக்கும் இயந் திரத்தை இயக்கும் முறையைக் கண்டு பிடித்துள் ளனர்.

சைக்கிள் பெல் முடியின் வெளி அடிப் பாகத்தில் நீண்டதொரு தடித்த கம்பியை ஒட்டுகிறுர்கள். அக்கம்பியின் விளிம்புக்கு மரத் தால் ஒரு பிடி போடுகிறுர்கள். பின் இந்த பெல்முடியை அடுப்பில் தணலில் இட்டுச் சூடாக்குகிறுர்கள். செந்நிறம் ஆகும் வரை இம்முடியைச் சூடாக்குகிறுர்கள். நீரிறைக்கும் இயந்திரம் ஸ்ரார்ட் பண்ண றெடி என்றதும் இம் முடிக்குள் மிகச் சிறிய அளவு மண்ணென் ணெய் விட்டு அம்மண்ணெண்ணெய் ஆவியை கார்புரேற்றரின் அடியில் அதாவது பெற்றோல் தெளிக்கும் இடத்தில் பிடித்துக் கொண்டு ஸ்ராட் செய்ய எந்த வித மக்கரும் செய்யாமல் ஸ்ரார்ட் செய்கிறது. இது நான் என் அனுபவத் திலேயே செய்து பார்த்த விடயம்.

## இருளில் இயங்கும் ஊழியர்கள்

யாழ் கச்சேரி ஊழியர்கள் பகலில் இருளாக இருக்கும் தங்கள் காரியாலயங்களில் இருந்து வேலை செய்கிறுர்கள். மின்சாரம் இல்லாததால் பகலில் இருளாக இருக்கும் தங்கள் அலுவலகத் தில் வெகு சாதாரணமாக வேலை செய்கிறுர்கள். இருளிலே கடமையாற்றி அவர்கள் கண்களுக்கு குறைந்த ஒளியிலும் வாசிக்கும் தன்மையைப் பெற்று விட்டார்கள். கதிரையில் இருப்பவருக்கு மிக்க கிட்டச் சென்றுல் தான் ஆள் இருப்பது நன்கு தெரியும்.

## கடும் மோதல்

28.5.92 அன்று விடுதலைப்புலிகளுக்கும் இராணு வத்திற்கும் கடும் மோதல் நடைபெற்றது. இராணுவம் தமது எல்லையைத் தெல்லிப்பழை யில் விஸ்தரிக்கப் பகீரத்தனம் செய்து கொண்டு இருந்தது. கட்டுவன், மயிலிட்டி, தையிட்டி, காங்கேசன்துறை, கீரிமலை ஆகிய பகுதிகளில் இருந்த மக்கள் ஏற்கனவே தங்கள் வீடு வாசல சொத்துக்களை இழந்து அகதிகளாகத் தெல்லிப் பழைத் துர்க்கை அம்மன் கோவிலில் தஞ்சம டைந்து இருந்தனர். அன்று பகல் இராணுவம் பொம்மரில் வந்து சரமாரியாகக் குண்டுகளைப் போட்டது. 15இற்கும் மேற்பட்டோர் இறக்க நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். துர்க்கை அம்மன் ஆலயத்தின் பெரும்பகுதி சேதமடைந்தது. காயமுற்றவர்களை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்ல முடியாது ஹெலியும பறந்து பறந்து துரத்தித் துரத்தி 50 கலிபர் துப் பாக்கிகளால் துளைத்தெடுத்தது. அம்புலன்ஸ் வண்டிகள் ஹெலிகளின் தாக்குதலால் பலத்த சேதத்திற்குள்ளானது. ஆனுல் காயமடைந்த புலிகளை ஏற்றி வந்த வாகனங்களையே தாம் தாக்கியதாக இராணுவத்தினர் கூறியதை நான இங்கு வந்தபின்னர் அறிந்து ஆச்சரியமுற்றேன். எத்தனை உண்மைகள் இங்கு எமக்குத் தெரியப படுத்த முடியாமலேயே மண்ணேடு மறைந்து விடுகின்றன.

## மாபெரும் ஊர்வலம்

துர்க்கை அம்மன் கோவில்த் தாக்குதலை அடுத்து மாபெரும் மௌன ஊர்வலம் ஒன்று துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக குட்டி அவர்கள் தலைமையில் நடாத்தப்பட்டது. அரசின் மிலேச்சத்தனமான இக்கொடுமையை எதிர்த்து யாழ் மக்கள் ஒருங்கே அணிதிரண்டு இருந்தனர். 10,000 பேர் வரை கலந்து கொண்ட ஊர்வலத்தில் பெண்கள், மாணவர், சமூக அமைப்புக்கள் பெருமளவில் கலந்து கொண டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## மரங்களோடு மரங்களாக ஆட்டோக்கள்

துர்க்கை அம்மன் ஆலயத் தாக்குதலின் பின்னர் தொடர்ந்து யாழ்நகரில் கடும் ஷெல், விமான, ஹெலித்தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டு இருந்தன. வீதிகளில் ஓடும் ஹெலி தாக்குதலில் இருந்து தப்புவதற்காக ஆட்டோவைச்சுற்றி இலை குழைகளைக் கட்டி மரங்களைப் போல சோடித்து ஓடித்திருந்தன. ஹெலி மேலே வட்டமிடும் போதெல்லாம் இந்த ஆட்டோக்கள் வீதி ஓரங்களில் மரங்களோடு மரங்களாக நின்று தம்மையும் பயணிகளையும் காத்துக் கொள்கின்றன. தூரத்தில் இந்த ஆட்டோக்கள் வரும் போது மரமொன்று உயிர் பெற்று ஓடி வருவது போலிருக்கும்.

## வீதிகள் செப்பனிடப்படுகின்றன

யாழ் நகரின் பெரும்பாலான வீதிகள் இப்போது செப்பனிடப்பட்டு தார் ஊற்றப்பட்டு ஒழுங்காக்கப் பட்டு வருகின்றன. குண்டுத் தாக்குதலால் குன்றும் குழியுமாக உள்ள இந்த வீதிகளில் சைக்கிளில் ஓடும் போது கிடங்குகளில் இருந்து தப்ப அங்கும் இங்கும் வெட்டி ஓடுவ தால் அடிக்கடி சிறு சிறு விபத்துக்கள் சம்ப விக்கின்றன.

## போராளிகளின் பெயர்களில் வீதிகள்

ஈழ விடுதலைப் போரில் உயிர் நீத்த போராளிகளைக் கௌரவிக்குமுகமாகப் போராளிகளின் பெயர்களிலேயே வீதிகளின் பெயர்ப்பலகைகளை அமைத்துள்ளனர். மஞ்சள் நிறப்பலகையில் சிவப்பு எழுத்துக்களில் அவர்களின் பெயர்கள் வீதிகளுக்கு அமைக்கப்பட்டிருந்தன. சில வீதிகளில் போராளிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மாலைகள் அணிவித்தும் காற்று மழையில் தாக்குறுவண்ணம் சுற்றி வர மூடியும் காணப்பட்டன.

## வீதிகள் செப்பனிடப்படுகின்றன

யாழ் நகரில் உள்ள வீதிகள் சிறிது சிறிதாகச செப்பனிடப்பட்டு வருகின்றன. நாவலர் வீதியின் சில பகுதிகளில் ஆங்காங்கு திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.
விமானக்குண்டுத் தாக்குதல்களாலும் ஷெல் தாக்குதல்களாலும் கன்றும் குழியுமாக வீதிகள் இருப்பதால் வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமத்திற்குள்ளாவதும் விபத்துக்கள் நடைபெறுவதும் பெருகி இருந்தன.

## பாஸ் எடுப்பதற்கு மக்கள் அலாய்ப் பறப்பு

கொழும்புக்குச் செல்லும் மக்கள் விடுதலைப் புலிகளிடம் பாஸ் எடுப்பதற்கு ஆலாய்ப் பறப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.
பவுண் கட்டிய ரசீது உள்ளவர்கள் மட்டுமே பாஸ் எடுக்கக்கூடியதாக இருந்தது.தீவுப்பகுதி மற்றும் இராணுவத் தாக்குதல்களினால் எகதிகளாக ஆக்கப்பட்டவர்களுக்கும் ஆதாரமற்றவர்களுக்கும் பவுண் கட்டாமலே பாஸ் வழங்கப்படுகிறது. இரு பவுண்கள் இல்லது 10,000 ருபா தேசிய மீட்பு நிதிக்கு கொடுக்க வேண்டும். இப்பணம் அல்லது பவுண் குலுக்கல் மறையில் திரும்பக் கொடுக்கபடுகிறது.

## தமது சவப்பெட்டிகளுடன் சாவை நோக்கிச் செல்லும் சரித்திர நாயகர்கள்

இதுவரை விடுதலைப்புலிகள் சயனைட்டுடன் தான் போர்க்களம் போயிருக்கிறார்கள். ஆனால் இந்நாட்களில் முன்னேறிறக்கில் விடுதலை வேங்கைகள் செல்ல பின்னேறிறக்கில போரில் இறக்கும் புலிகளை உடலுக்குடன பெட்டிகளில் கிடத்திசென்றிக்குக் கொண்டு வருகிறார்கள். விடுதலை அல்லது விரமரணம என்பதில் வேங்கைகள் வெறியாக இருக்கிறார்கள்.

## துப்பாக்கி இழந்தோர் சென்றிக்கு வெளியே

விடுதலைப் புலி ஒருவருடன் உரையாடிக கொண்டிருந்த போது தாங்கள் போராடும போது எதிரியைக்கொன்று அவனது ஆயுதத தைச் சென்றிக்குக் கொண்டு வந்தால் தமக்கு வீர வரவேற்பு அளிக்கப்படுவதாகவும் தமது ஆயுதத்தை இழந்து விட்டு வந்தால் சென்றிக்கு வெளியே நிற்க வேண்டி ஏற்படும் என்றும கூறினார்.

# சரஸ்வதியும் இலக்குமியும்

இனிய வாசகர்களே கடந்த இதழில் என எண்ணக்கிடக்கையின் ஓர் பகுதியை உங்களுக்கு மனந்திறந்து எழுதினேன். கால இடை வெளி சற்றுக் கூடினாலும் மீதியையும் உங்களு டன் இந்த இதழில் பகிர்ந்து கொள்கிறேன்.

பண வசதி அற்றவர்களைப் பார்த்து ஏளனம் செய்து அவர்களைத் துன்புறுத்தும் அளவுக்கு ஒரு பயங்கர மனோபாவம் நமது குழந்தைகளிடம் வளர்வதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.
பகிர்ந்துண்டு வாழ்வது[
எமது சக்தியில் நேரத்தில் ஒரு சிறு துளியையாவது நம்மை விடப்பலங்குறைந்தவர்களுடன் பகிர்ந்த கொள்வது என்ற உணர்வுகளை நாம் இவர்களிடம் காண முடிவதில்லை.
இதற்கு இந்தப் பிஞ்சு உள்ளங்களைக்குறை கூறுவதில் எந்த விதப்பயனும் இல்லை என்பது எனது கருத்தாகும்.

இந்த விடயத்தில் அவர்களில் பலரத பெற்றோர்களே இவர்களின் இந்தப் போக்கினை விதைத்து வளர்ப்பவர்களாக இருப்பதைக் காண்கின்றோம்.
நான்கு சுவருக்குள் தம்மை அடைத்துக்கொண்டு சமுதாயத்துடன் பிள்ளைகளைக் கலந்த கொள்ள விடாமல் இவர்கள் இவர்களது பிள்ளைகளைத் தடுப்பது கூட நாம் புரிந்து கொள்ள முடியும்.
பணமே உலகம் எப்பதைக்கூட நாம் சீரணித்துக் கொள்ள முடியும். ஆனால் இந்தப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அந்நிய மோகத்தின் கைதிகளாகவும் நெஞ்சில் அடிமைத்தனமும் கோழைத்தனமும் உள்ளவர்களாகவும் வளர்ப்பதையும் தமிழையும் கலையையும் பேணுவது பிற்போக்குத்தனம் என்றதொரு நஞ்சுத்தனத்தைத்தனது பிள்ளைகளின் நெஞ்சில் விதைப்பதையும்தான் தாங்கிக்கொள்ள முடியாமல் இருக்கிறது.

இந்தப் பெற்றோர்கள் தாமும் நாடற்ற உலக அகதிகளின் அங்கத்தவர்கள் என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளத்தவறுவதோடு அந்நிய மொழி, கலைகளைப் பிள்ளைகளுக்குப் போதிப்பதால் தமது வீட்டுக் கம்பளத்தின் தடிப்பினைக் கூட்டிக் கொள்ளலாம் என்ற ஒரு நப்பாசை உள்ளவர்களாகவும் இருப்பதே நெஞ்சைப் பிழிகிறது.
இவர்கள் தமது போக்கை எவ்வாறு நியாயப் படுத்துகிறார்கள்? இதற்கு யாரை உதாரணம் காட்டுகிறார்கள்?
நன்றாக இவர்களை உற்று அவதானித்து அவர்களது வாதங்களை உற்றுக் கேட்டதன் விளைவாகவே இக்கட்டுரையை நான் எழுதத் துணிந்தேன்.
சரசுவதியும் இலக்குமியும் ஒரு வீட்டில் வாழ மாட்டார்கள்[
பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை.
இல்லானை இல்லாள் வேண்டாள்.
ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்
இவற்றையை இவர்கள் தமது கருத்துக்கு ஆதாரமாக்குகிறார்கள்.
கொள்கைகள், இலட்சியங்கள், நம்பிக்கைகளுடன் வாழ்பவர்கள வாழ்க்கையில் தோற்றுப் போனவர்கள் என்று கூறித் தமிழையும் கலையையும் பண்பாட்டையும் நேசிக்கும் எம்மை உதாரணம் காட்டுகிறார்கள். எம்மை ஏழ்மையின் தோழர்கள் என்று கூறி எள்ளி நகையாடுகிறார்கள்.
தமிழ்க்கலையும் தமிழ் மொழியும் தமிழ்த் தேசிய உணர்வும் வாழ்க்கைக்கு உதவாதவை என்றும் உயர்வுக்குத் துணை தராதவை என்றும் வாதாடுகிறார்கள். மேலைத் தேயக்கல்வியும் கலையுமே வாழ்வின வெற்றிக்கு ஆதாரமானவையென்ற ஒரு போலித்தமான நம்பிக்கையைத் தமது பிள்ளைகளுக்குப் போதிக்கிறார்கள்.
பணம் படைத்தவர்களை கூட்டி, ஒரு வர்க்கத்தை உருவாக்குவதில், இவர்கள் தீவிரமாக நிற்கிறார்கள்.
பணம் படைத்தவர்களைப் பல்லக்கில் ஏற்றிப் பெருமை தேடும் பச்சோந்திகளையும் தம்முடன் இவர்கள் சேர்த்துக்கொள்கிறார்கள்.
மேலைத்தேயக்கலைகளையும், விளையாட்டுக்களையும் நேசிப்பதைத் தமது தகைமைகளுள் ஒன்றென இவர்கள் தாமும் நம்பித் தமது பிள்ளைகளையும் நம்ப வைப்பது மட்டுமன்றி ஏனையவர்களின் பிள்ளைகளுக்கும் விஷ விதை போடுவதில் மிகவும் சிரத்தையுடன் இருக்கிறார்கள்.
இவர்கள் தமிழையும் கலையையும் நேசிக்கும் நமக்கு ஒரு சவாலாகத் தோற்றமெடுத்

# ஈழத்துச் செய்திகள்

## கிளாலி கடலேரியில் அறுபதிற்கு மேற்பட்ட பயணிகள் பலி

கிளாலி கடலேரியில் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற 16 படகுகள்மீது சிறீலங்கா கடற்படையினர் 2.1.93 கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடாத்தியுள்ளனர். அரைமணி நேரத்திற்கு மேலாக நீடித்த இக்கொடிய தாக்குதலுக்கு தப்பி 6 படகுகள் மட்டுமே கிளிநொச்சி மாவட்ட நல்லூர்க்கரையை அடைந்தன. ஏனைய படகுகள் பற்றிய விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

## வாகரை உன்னிச்சை மாங்கேணி இராணுவ முகாம்கள் மூடப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இம்மூன்று இராணுவ முகாம்களும் மூடப்பட்டுள்ளன. உன்னிச்சை இராணுவ முகாம் மட்டக்களப்புக்கு மேற்கே படுவான்கரை பகுதியிலும் வாகரை மாங்கேணி ஆகிய படை முகாம்கள் வாழைச்சேனைக்கும் திருமலைக்கும் இடையில் இயங்கி வந்தன.

## யாழ் வைத்தியசாலையில் 283 குழந்தைகள் மரணம்

யாழ் போதனாசாலைப் பதிவேட்டின்படி கடந்த 7 மாதங்களில் 283 குழந்தைகள் மரணமடைந்துள்ளதாகவும் 148 குழந்தைகள் பிறந்து இறந்ததாகவும் மீதி 135 குழந்தைகள்தாயின் வயிற்றினுள்ளேயே இறந்து பின் பிறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய ஆயர் அகதிகளைச் சந்தித்தார்

யாழ் மறை மாவட்டத்தின் புதியஆயர் பேரருட். திரு தோமஸ் சௌந்தரநாயகம் அவர்கள் மானிப்பாய்ப் பங்கிற்கு வருகை தந்து அப்பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் அகதிகளாக இடம் பெயர்ந்து வந்து தங்கியிருக்கும் இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு மாரீசன்கூடல் சில்லாலை ஆகிய கங்குகளைச் சேர்ந்த மக்களைநேரில் சந்தித்துக் குறைபாடுகளைக் கேட்டறிந்து ஆறுதல் கூறினார்.

## அகதி முகாம்களைப்பொறுப்பேற்கத் தயக்கம்

யாழ் மாவட்டத்தில் இயங்கும் அகதி முகாம்களைப் பொறுப்பேற்க அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதிகள் தயக்கம் தெரிவித்துள்ளனர். யாழ் விஜயம் செய்த இப்பிரதிநிதிகளைச்சந்தித்த யாழ் அரச அதிபர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் முகாம்களைப் பொறுப்பேற்குமாறு கேட்டதற்கு " இம்முகாம்களைப்பராமரித்து வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்போது என்னென்ன பிரச்சனைகளை எதிர் நோக்குகிறார்களோ அதே பிரச்சனைகளை நாமும் எதிர்நோக்க வேண்டி வரும். முதலில் யாழ் எடுத்து வரஒழுங்கான பாதை அரசு அமைத்துத் தரட்டும். அதன் பின்பு முகாம்களைப் பராமரிப்பது பற்றிப் பரிசீலிப்போம் " எனக் கூறினர்.

## 28 ஆயிரம் விண்ணப்பங்கள் பூர்த்தி

யாழ் பிறப்பு - இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் தேங்கிக் கிடந்த 28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிறப்பு இறப்பு மற்றும் திருமண அத்தாட்சிப்பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் மாவீரர் வாரத்தின் போது எழுதிப் பூர்த்தியாக்கப்பட்டன. யாழ் கச்சேரியில் கடமை புரியும் எழுதுநர்கள், சிற்றூழியர்கள் ஆகியோரும் இதில் ஈடுபட்டனர்.

## மண்டையோடுகளும் அடையாள அட்டைகளும்

வங்காலையில் தமது வீட்டில் மீளக்குடியமரச் சென்ற வயோதிபர் ஒருவர் தனது வீட்டில் கிணற்றைச் சுத்தம் செய்யும் போது 5 பேருடைய மண்டையோடுகளைக் கண்டெடுத்துள்ளார்.

துள்ளார்கள். தமிழையும் கலையையும் பேணி வளர்க்கும் கலைஞர்களுக்குப் பிள்ளைகளாகப் பிறப்பது ஒரு பாவக்கேடு என்றதொரு கொடுமையான நம்பிக்கையைப் பிள்ளைகளுக் குத் தந்து அவர்களைத் தமது பெற்றோரையே வெறுக்கும் அளவுக்குத் தூண்டி விடக்கூடிய நிலைமை முளைத்தெழுவதை என்னால் பார்க்கக்கூடியதாகவுள்ளது.

மேலைத்தேயக்கலைகளை நான் வெறுக்கவில்லை. அவற்றை ரசிப்பதற்கு நான் தவறுவதில்லை. அதைப்பயிலவும் நான் தயாராக உள்ளேன். நாம் கற்றுக்கொள்ள மேலைத்தேயக்கலைஞர் களிடம் மூட்டை மூட்டையாக இருக்கின்றன.

எனினும் எமது கலைகள் மேலைத்தேயக்கலை களுக்கு எதுவிதத்திலும் சளைத்தவையல்ல என்பதில் நான் மிகவும் தீவிரமாக இருக்கிறேன்.

எமது தாய் மண்ணில் கலையையும் மொழி யையும் இலக்கியத்தையும் படைத்தவர்களை நேசிக்கவும் போற்றவும் ஒரு கூட்டம் இருந் தது. இந்த நேசமும் வாழ்த்துக்களுமே எமது கலைஞர்கள் பலரை நெஞ்சில் நிறைவுடன் வாழ வைத்தன. பண வருவாய் இல்லாத போதிலும் மனநிறைவும் அமைதியும் எமது கலைஞர்களுக்கு இருந்தது.

படைப்புக்களுக்கு உரிய கருப்பொருட்கள் பசுமையாகக் கிடைத்தன.

ஆனால் அன்னிய மண்களில் வாழும் நம் மக்கள் மேலைத் தேய வாழ்க்கைச் சூறாவளியில் சிக்குண்டு இழுபட்டுச் செல்வதை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

எமது மொழி, கலை நோக்கிய உணர்வுகளுக் குப் பஞ்சம் ஏற்பட்டு வருகிறது.

1970 களில் லண்டனில் தமிழ்த் தேசியம் கலந்த தமிழுணர்வு பூத்து மலர்ந்த தைக் கண்டு பெருமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இன்று ஒரு போலியான தமிழுணர்வு நமது மக்களை மூடிக் கொள்வதைக் கண்டு குமுறுகிறேன். தமிழ்த்தேசிய உணர்வு ஒரு சட்ட விரோதமான பிரச்சனையென்ற நிலையில் போலித்தனமான மொழியறிவும் கலையறிவும் பாடசாலைகளில் போதிக்கப்படுகிறது.

தமிழ்ப்பண்பாடு கலைகளினால் ஏது பயன்? ஆங்கிலக் கல்வியும் பிரெஞ்சு, ஜேர்மனிய மொழியறிவும் எமது பிள்ளைகளுக்கு இருந் தால், ஐரோப்பியக் கட்டமைப்பு உருவாகும் போது எமது பிள்ளைகளின் எதிர்காலம் வலுப்பெற முடியுந்தானே?

எமது கடவுச்சீட்டில் 'பிரித்தானியா' என்று பொறிக்கப்பட்டு விட்ட வரையில் நாமும் நமது பிள்ளைகளும் சகல பாதுகாப்புக்களையும் பெற்று விட்டோம். இது போதுந்தானே? என்ற சிந்தனை ஒட்டங்களுடன் நம்முள் பலர் நடமாடி வருவதை நாம் பார்க்கத்தான் செய்கிறோம்.

பொருளாதாரம் நோக்கிய இக்குறுகலான சிந்தனை ஒட்டமுடையோர் எதுவித அரசியல் சமூக தீர்க்கதரிசனங்களுமற்ற வர்களாக இருக்கக் காண்கிறோம்.

உலகின் ஒவ்வோரினமும் தனது அடையாளச் சின்னங்களையும் தனது தேசியச் சான்று களையும் தனது மொழி கலாச்சார உடைமை களையும் உரிமைகளையும் பேணிப்பா துகாக்கப் போராடிக் கொண்டிருப்பதை அறிந்தும் அறியாதவர்கள் போல நம்மவர்கள் நடித்து வருகிறார்கள். பொருளாதாரத்தால் முன்னேறிய நாடுகள் சில தமக்கென ஒரு கலை கலாச்சாரமின்றி வெட்கப்பட்டுக் கொண்டி ருக்கின்றன. நாம் ஓர் தேசிய இனமாக ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வந்திருக் கிறோம். நமது மொழி, கலை, பண்பாடு பெரிய தொரு வரலாறு கொண்டது.

நாம் டாக்டர்களாகவோ எஞ்சினியர்களா கவோ எக்கவுண்டனுகவோ வந்து விட்டால் மட்டும் நாம் வெற்றி கண்டவர்களாக மாட் டோம். தேசிய அறிவும் பற்றும் கொண்டவர் களாகவும் எமது தேசியத் தொழில்களையும் வளங்களையும் பற்றிய அக்கறை கொண்டவர்களாகவும் இல்லாது போயின் நாளை நமது பிள்ளைகள் அநாமதேய அகதிக ளாக உலாவுவர். அவர்களுக்கு எந்த நாட்டி லும் மதிப்பும் செல்வாக்கும் இருக்கப்போவ தில்லை. எமது பிள்ளைகளின் நெஞ்சில் எமது தேசியக் கலைகள் மீதும் பண்பாட்டின் மீதும் கமது மொழியின் மீதும் பற்றுதலும் மதிப்பும் ஏற்பட வழி செய்வது நமது கடமையாகும்.

இவற்றின் தேவையினை நாம் எடுத்துரைக்கத் தவறுதல் கூடாது.

தமிழையும் கலையையும் பேணுபவர்களும் வாழ்வில் பணம் படைத்தவர்களாக உயர் முடியும் என்ற உத்வேகத்தையும் உணர்வினை யும் நம்பிக்கையையும் நாம் உருவாக்குதல் வேண்டும்.

சரஸ்வதியும் இலக்குமியும் ஒரு வீட்டில் வாழ வேண்டும் என்ற ஒரு தேவையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கலைஞர்கள் ஏழைகளாகத்தான் வாழ வேண்டும் என்பதில்லை. தமிழையும் கலையையும் நேசிப்பவர்கள் அவற்றின் சிறப்பு நோக்கி உழைப்பவர்கள் வாழ்வில் தோற்றுப் போனவர்கள் என்ற பழிச்சொல்லில் இருந்து

நம்மையும் நாளைய நமது சந்ததியையும் நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

இங்கு பல வெள்ளையர்கள் நமது கலைகளைப்போற்றத் தயாராக உள்ளனர். பல ஊடகங்கள் நமது பண்பாட்டுக் கலை விவகாரங்களில் தம்மை ஈடுபடுத்தத் தயாராகஉள்ளன.

பங்கயமணாளன்

தொடரும்

## மட்டக்களப்பில் டென்மார்க் மனித உரிமைகள் குழு

டென்மார்க் நாட்டின் மனித உரிமைகள்குழு ஜனவரி 17ம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்தது. மூவர் கொண்ட குழுவிற்கு டென்மார்க் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் மனித உரிமைப்பிரிவின் தலைவர் நைல் ஸ்பிச்தர் தலைமை வகித்தார். அவரது உரையில் " இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண நடவடிக்கைஎடுக்குமாறு டென்மார்க் அரசை நாம் வற்புறுத்துவோம்" என்றார்.

## பாதை மூழ்கி 40 பேர் மரணம்

ஜனவரி 24ம்திகதி பகல் திருமலையில் இருந்து மூதூருக்குச் சென்ற பாதை மூழ்கியதால் 7 படையினர் உட்பட 40 பேர் நீருள் மூழ்கி இறந்துள்ளனர். 50 பேர் செல்லக்கூடிய படகில் 80 இற்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்ததாலே இவ்விபத்து நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஒரே நாளில் 2,000 இற்கும் மேற்பட்ட பயணிகள் யாழ் நகரில் இருந்து பயணம்

கிளாலி படகுச்சேவை இம்மாதம் 16ம் திகதி ஆரப்பிக்கப்பட்டதைஅடுத்து பெரும் தொகைப் பயணிகள் வவுனியாவை அடைந்துள்ளனர். யாழ் நகரில் ஒரு கிலோ அரிசி 45 ருபாவாகவும் தே. எண்ணெய் போத்தல் 90 ருபாவாகவும் தீப்பெட்டி 7 ருபாவாகவும் விற்கப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## திருமலையில் தமிழ்காணிகளில் சிங்களவர் குடியேற்றம்

திருகோணமலையில் இந்து ஆலயங்களுக்குச் சொந்தமான நிலத்திலும் அரச காணிகளிலும் இத்துமீறிக் குடியேறிய சிங்கள மக்களுக்கு அவர்கள் குடியேறியுள்ள காணிகளைவழங்குவதென அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. உப்புவெளியில் உள்ள மக்கள் குடியிருப்புப் பகுதிகளும் மூதூர் தம்பலகாமம் ஆகிய பகுதிகளில் உள்ள இந்துக்கோயில்களுக்குச் சொந்தமான பயிர்ச்செய்கை நிலங்களுமே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

## இராணுத்தீர்வு இனப்படுகொலைக்கே வழிவகுக்கும்

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காண முற்பட்டால் அது இனப்படுகொலைக்கே வழி வகுக்கும். புலிகள் உட்பட சகல தமிழ்க்கட்சிகள், குழுக்களுடனும் பேச்சு நடத்துவதன் மூலமே அரசியல் தீர்வு காண முடியும் என அவர் தெரிவித்தார். சமஷ்டி ஆட்சி முறை இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வு ஏற்படுத்தாது என்பதையும் அவர் வற்புறுத்தினர்.

## கடற்படையும் புலிகளும் தொடர்ச்சியான மோதல்

கிளாலி கடலேரியில் கடற்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா கடற்படையினருக்கும் தொடர்ச்சியாக கடலில் பலத்த சண்டை நடைபெற்று வருகின்றது. ஸ்ரீலங்கா பீரங்கிப்படகுகளையும் ரோந்துப்படகுகளையும் கடற்புலிகளின் ரோந்துப்படகுகள் எதிர்கொண்டு தாக்கின. பல தடவைகள் விட்டு விட்டு இச்சண்டை நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## குடா நாட்டில் அகோர எறிகணைத்தாக்குதல்கள்

யாழ் குடா நாட்டில் எகோர எறிகணைத் தாக்குதல்கள் ஸ்ரீலங்காப்படையினரால் நடாத்தப்படகிறது. இந்து கிறிஸ்தவ ஆலயங்கள், கடைகள் வீதிகள் என்பன பலத்த வேதத்திற்கு உள்ளாகி உள்ளன. பத்தமேனி சூசையப்பர் தேவாலயம், கதிரிப்பாய் இந்த அலயம், அச்சுவேலிச் சந்தையிலுள்ள தேனீர்க்கடைகள் உட்படப் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. வல்லைப்பாலமும் கடும் சேதத்திற்க உள்ளாகி உள்ளது.

# வெளிநாட்டுச் செய்திகள்

## றேடியோ தோன் (Radio Thon) வானொலி நிகழ்ச்சி

அவுஸ்திரேலியாவில் தமிழ் வொயிஸ், மெல்போர்ன் கம்யூனிட்டி ரேயோ ஆகியவை இலங்கைத்தமிழர் சம்மேளனத்துடன் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினருக்கு நிதி சேகரிப்பதற்காக "றேடியோ தோன்" என்னும் ஐந்தரை மணி நேர வானொலி நிகழ்ச்சியை கடந்த நத்தார் கொண்டாட்ட காலங்களில் வழங்கினர்.

## சென்னையில் குடியரசு தினத்தன்று 3 குண்டுகள் வெடித்தன.

தமிழ் நாட்டில் 25ம் திகதி 3 இடங்களில்குண்டுகள் வெடித்தன. சென்னை விழிப்புரம் மகாத்மாகாந்தி சிலைக்கு அருகே நடந்த குண்டு வெடிப்பில் சிலை சுக்கு நூறுகியது. மற்றைய இரு குண்டுகள் சேலத்தில் விழுந்தன. இங்கிலாந்துப்பிரதமர் இந்தியக்குடியரசு தின விழாவில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கருத்தரங்கு

அவுஸ்திரேலிய தமிழர் ஒன்றியம் இவ்வாண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கலை, இலக்கிய கருத்தரங்குகளை நடாத்தவுள்ளது. நடனம், நாடகம், சிறுகதை, இலக்கியம் ஆகிய குறைகளில் ஆர்வம் மிக்கவர்கள் கலந்து கொள்ளத்தக்கதாக இக்கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. முதலாவது கருத்தரங்கு " நாடகம்" என்னும் தலைப்பில் ஜனவரி 31 மெல்பேர்ன் வை.எம.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறும்.

## மண் சஞ்சிகையின் 3வது ஆண்டு விழா

ஜேர்மனியில் இருந்து வெளிவரும் "மண்" சஞ்சிகையின் மூன்றுவது ஆண்டு நிறைவும் சிறுவர் கலைவிழாவும் இம்மாதம் 9ம் திகதி நடைபெற்றது.இவ்விழாவில் செஞ்சிலுவைச்சங்கம், டியக்கோனி வேர்க்ஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்கிறுர்கள்.வண பிதா பிரான்சிஸ் ஜெயசேகரம் அடிகளார் உட்படப் பலர் சொற்பொழிவாற்றினுர்கள்.

## சுவிஸ் வலெ மாநிலத்தில் தைப்பொங்கல் விழா

சுவிற்சிலாந்து வலே மாநிலத்தில் உள்ள தமிழ் மக்கள் 17.01.93 அன்று தைப்பொங்கலை வெகு விமரிசையாகக் கொண்டாடினுர்கள். தென்கிழக்காசியத் தமிழ்க் கலாச்சாரமா மேற்கத்தைய கலாச்சாரமா சிறந்தது என்ற தலைப்பில் விவாத அரங்கு, கவியரங்கு நகைச்சுவைக்கதம்பம் இன்னிசை இரவு உட்படப் பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## ஜெயலலிதாவும் சசிகலாவும் துப்பாக்கியுடன் திரிய அனுமதி

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் அவரது தோழி சசிகலாவுக்கும் துப்பாக்கி வைத்திருக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. சென்னையில் மட்டும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் முன்னுள் அமைச்சர்கள் என்று சுமார் 1,500 பேருக்கு துப்பாக்கி வைத்திருக்க அனுமதி கிடைத்துள்ளது.

## எழுச்சி கானங்கள்

தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் (விட்டோரியா கிளை) " எழுச்சி கானங்கள் "இசை நிகழ்ச்சியை கடந்த 9ம் திகதி கொலிங்வுட் நகர மண்டபத்தில் நடாத்தினர். தமிழர் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் இசைப்பாடல்கள், அங்குள்ள இலங்கை, இந்திய சிங்கப்பூர் மலேசிய கலைஞர்களால் அரங்கேற்றப்பட்டன.

# ஒரு தாயின் அவல வாழ்வு

நிர்மலமாய் நீண்டு கிடக்கும் வானத்தையே வெறித்து நோக்குகிறுள் அந்தத தாய் அவளது எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள், இன்பக்கனவுகள் யாவும் இவ்வளவு தூரம இடிந்து விடுமென அவள் இம்மியளவும நினைக்கவில்லை ங "ஐந்து பெண்களைப் பெற்ருல அரசனும் ஆண்டியாவான்ங என்பார்கள். அத்துடன் பெண்ணைப் பெற்றுவிட்டால பேயைப் பெற்றுவிட்டது போல் வெறுக்கும் இத தாயுலக மத்தியில் இவள் மட்டும வித்தியாசமானவளாய் தேவி, கௌரி, லட்சுமி, துர்க்கா, வாணி என ஐந்து பெண்களை அடுக்கடுக்காய்ப் பெற்ற போதும கொஞ்சமேனும் சலிப்படையாமல் " என்ரை அஞ்சு பெண்களும் பொன்குஞ்சுகள். அதுகளுக்கு அஞ்சு ராசாக்கள் வருவாங்கள்" என எண்ணிப் பெருமை கொண்டாள்.

ஒருவேளை இவள் இந்த நாட்டில் பிறவாது வேற்று நாட்டில் பிறந்திருந்தால் இவளது கனவுகள் யாவும் நனவாகியிருக்குமோ? இந்த மண்ணில் பிறந்து விட்டதால் தான் இவளுக்கு இவ்வளவ சோதனைகளும் வேதனைகளுமோ!

" அம்மம்மா ... அம்மம்மா ...அப்பாவும், அம்மாவும் இன்னமும் ஏன வரேல்லை? அவையள் ஏனம்மம்மா இன்னமும சாமியாரிட்டையே நிக்கினம்." என ஒன்றுமறியா அந்தப் பிஞ்சுக் குழந்தையின கேள்விகளுக்கு என்ன பதில் செல்லுவதென்று புரியாது தவிக்கிறது அவள் உள்ளம். இக்கேள்விகளால் அவளது நினைவுகள் கிழறிவிடப்படுகையில் அவளது கண்களிலிருந்து நீர் ஆருகப் பெருகுவதை அறிந்த அந்தப் பிஞ்சுக்குழந்தை "ஏன் அம்மம்மா அழுகிறியள், அதோ.... அந்தப் படத்திலை இருக்கிற தாத்தா, பெரியம்மா, அன்ரியவை, அதோடை எங்கடை அம்மா, அப்பா, எல்லாம் சாமியாரிட்டைப்போட்டினமே! அவையள எல்லாம் அங்கை ஒன்ருய் சந்தோசமாய சிரிச்சுக் கொண்டிருப்பினம். நீங்கள் இஞ்சை தனிய இருந்து அழுகிறியள். வாங்கோ அம்மம்மா நாங்களும் அந்தச் சாமியாரிட்டைப் போவம்". இதைக் கேட்ட அவளால் மேலும் மௌனித்து இருக்கமுடியாத நிலையில் " ஐயையோ..." எனத் துடித்துக்கொண்டு " அப்படியெல்லாம் சொல்லக் கூடாது பிள்ளை" எனக் கூறி அவளைக் கட்டிப்பிடித்து அழுகிருள்.

அவள் எதற்கென்று அழுவது ஆம். ஒருநாள் இவளது கடைசிமகள் வாணி பிறந்து மூன்று வருடம் முடிவடையும் தறுவாயில் இவளதுகணவர் " இங்கை பாரும் செல்லம்.." செல்லம்மாதான் இவளது பெயர். அதைச சுருக்கி அன்புடன "செல்லம் " என்றே அழைப்பார். " இண்டைக்கு எனக்கு ஓவற்டைம் வேலையிருக்கு நான் சிலவேளை வரமாட்டன். இரவுச்சாப்பாட்டைப் பிள்ளையளுக்குக் கோடுத்துவிட்டு நீரும் சாப்பிட்டுப் படும்" எனப் கூறிவிட்டு வேலைக்குச் சென்றவர்தான் மதியம் ஒரு மணியளவில் பிணமாக வீடு வந்து சேர்ந்தார். பொண்டு வந்தவர்கள் " வேலை செய்து கொண்டிருந்தவர் இருந்தாப்போல நெஞ்சுக்கை என்னவோ செய்யுது எண்டாா கடைக்குப் போய் 'ரீ' வாங்கிவந்து கொடுத்தம். ஒருவாய் குடித்தவர்தான அப்பிடியே சரிஞ்சு போஞர் என்று கூறவே " இதுக்குத்தான் இண்டைக்கு வரமாட்டன் எண்டு சொல்லிப்போட்டுப் போனியளோ " எனக் கதறி அழுதாள். அன்றிலிருந்துதான் அவளுக்குச் சோதனை மேல்ச் சோதனை அடிமேல் அடி விழ ஆரம்பித்தது.

இவளது மூத்தமகள் தேவிக்கு பதினைந்து வயதிருக்கும். அப்பாவின் இழப்ப ஒருபுறம் வேதனையை அழித்தாலும் அம்மாவின் வெறுமையான நெற்றியையும், பூச்சூடாக் கூந்தலையும், நிறமழிந்த சேலையையும் காணுகையில் அவளின் உள்ளம் வேதனையால குமுறியது. அம்மா ! எப்பொழுதுமே குளித்து சுத்தமாக உடுத்து நெற்றியில் பளிச்சிடக் குங்குமப் பொட்டிட்டு கூந்தலில் ஏதாவது ஒரு பூவைச் சூடியிருப்பாள். 'சுத்தம் சுகம் தரும்' என்பது அவளின் கொள்கை. அப்பா ஒரு கொம்பனியில் கணக்காளராக வேலை பார்த்தமையால் ஒரு சிறுதொகைப் பணத்தையே அவாகள் கொடுத்தார்கள். இதைவைத்து செல்லம்மா தன்னையும் சேர்த்து ஆறு சீவன்களை எப்படிச்சமாளிப்பாள். இதனுல் காலைப்பலகாரம் செய்து விற்று அதிலிருந்து கொஞ்ச வருவாயை ஈட்டினுள் அவள். தாயை மட்டும் நெருப்பு வெக்கையில் வேகவிட விரும்பாத தேவி தனது படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு தாய்க்கு உதவியாக வீட்டோடேயேயிருந்து விட்டாள். இவ்வளவு சிறுவயதிலேயே நல்ல பொறுப்புணர்வ கொண்டவளாயிருந்தாள். தங்கைகளின் நல வாழ்விற்காய் அயராது பாடுபட்டாள் அவள்.

"பிள்ளை அந்தத் தோசையளை எடுத்து வண்ணப் பெட்டிக்கை வைச்சு சம்பலையும் கிண்ணத்துக்கை போட்டுத் தா

மோனை. நேரம் போட்டுது. பிறகு அந்தக் கடைக்காரச் சுப்பர் முணுமுணுப்பார் ". என்றவள் தன்னைக் கழுவித்துடைத்துச சேலையைச் சரிப்படுத்திக் கொண்டு வந்தாள். " இந்தாங்கோ அம்மா " எனத் தாயிடம் கொடுக்கிறாள் தேவி. அதை வாங்கிய செல்லம்மா " நான் போட்டு வாறன் " என விடை பெற்றுச் சென்றவள் கேற்றடியில் நின்று " துர்க்கா ..." என்று குரல்கொடுக்கவே " என்னம்மா..." என்றவளிடம் " அந்தக் கடலைப்பருக்கை ஒருக்கா ஊறப் போட்டு விடுபிள்ளை. இண்டைக்கு வடைக்கு யாரோ ஒடராம். அதுதான் நனையப் போட மறந்திட்டன்".

" சரி அம்மா " என்ற துர்க்கா வீட்டினுள் வந்து " அக்கா அந்தக் கடலைப் பருப்பை ஊறப் போட்டு விடுகிறியளோ... எனக்கு நேரம் போட்டுது!! "ஓம்துர்க்கா.., அது சரி சாப்பிட்டியே " "இல்லையக்கா " என்றவள் இரண்டு தோசைகளை விண்டு வாயினுள்த் திணித்து வட்டு கையைக் கழுவிக்கொள்கிறாள். " சரி... வாதங்கைச்சி.."

எனக் கடைக்குட்டி வாணியைத் தனது சைக்கிளில் ஏற்றிச் செல்கிறாள். இப்போ இங்குள்ளவர்களுக் கெல்லாம் இந்தத் துவிச்சக்கரவண்டிதான் பிரதான போக்கு வரத்துச் சாதனமாய் அமைந்து விட்டது.

அவர்களை வழியனுப்பி விட்டுத் திரும்புகையில் வீட்டினுள் ஒரு அசாதாரண அரமதி நிலவுகிறது. " அக்கா என்ரை பேனையை எடுத்தனிங்களே...", " அம்மா என்ரை பாக் எங்கை.." என ஒருவர் மாறி ஒருவர் கத்திக் காலையில் வீடு ஒரே அமக்களமாயிருக்கும். இவற்றையெல்லாம் எடுத்துக் கொடுத்து அவர்களை அனுப்பிவிட்டு நிம்மதிபட பெருமூச்சொன்றை விடுவாள் செல்லம்மா. இப்பிடியே சில காலம் செல்கிறது.

தேவிக்கு 21 வயதாகையில் தனது குடும்பச் சுமையைக் குறைக்க எண்ணிய செல்லம் " பிள்ளை இண்டைக்கு உன்னைப் பெண் பார்க்க வருவினம் நல்ல சேலையைக் கட்டி எல்லாம் ரெடியாய் இரு மோனை " எனக் கூறவே இதைக் கேட்ட தேவி " இதென்னம்மா திடீரெண்டு பெரிய குண்டைத்தூக்கிப் போடுறியள். எனக்கிப்ப கலியாணத்திற்கு என்னம்மா அவசரம். தயவுசெய்து நான் சொல்லு றதைக் கேளுங்கோ ". " இங்கை பார்பிள்ளை...நீ இப்ப எனக்கு ஒண்டும் எசால்ல வேண்டாம். என்ரை எசாற்படியே நடப்பாய் எண்ட நம்பிக்கையிலதான் எல்லாம் ஒழுங்கு செய்து போட்டன். நீ இப்படிக் குழப்பியடிச்சால் பிறகு என்னை உயிரோடை காணமாட்டாய் " என அவளின் வாய்க்குப் பூட்டுப் போட்டுவிடுகிறாள். யாவும் நல்ல படியாக முற்றுப்பெற்று கலியாணத்திற்கும் நாள் குறித்தாகி விடுகிறது. பிறகென்ன வீடே கலியாணக் களையுடன் திகழ்கிறது. தங்கைகளின் சந்தோசத்திற்கு அளவேயில்லை. இப்படியிருக்கையில் அன்றையதினம் மாலை கௌரி விளக்கைத் துடைத்து எண்ணெய் விட்டுக்கொண்டிருக்கிறாள் இவர்களின் வீடு சின்னதாய் இருந்தாலும் அவற்றிற்கு மின்சாரவசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருந்தன. ஆனால் இங்குள்ள பிரச்சனையால் மின்சாரம் துண்டிக்கப்படவே மீண்டும் மண்ணெண்ணெய் விளக்கிடமே தஞ்ச மடைகின்றனர். விளக்கின் சிமினியைத் துடைத் துக் கொண்டிருந்த கௌரி திடிரெனத் துள்ளி எழுகையில் சிமினி நிலத்தில் வீழ்ந்து பெரிய சத்தத்துடன் சிதறுகிறது. இச்சத்தம் கேட்டு ஓடிவந்த அம்மா தனக்கே உரிய அவசரத்தில காரணம் எதுவும் புரியாமல் " நல்ல காரியம் நடக்க இருக்கேக்கை வெள்ளிக்கிழமையும் அதுவமாய் உடைச்சுப்போட்டியே. கொஞ்சமெண்டாலும் கவமிருக்க வேணும் " என்றவள் ஏதோ விபரீதம் நடக்கப போகிறதேயென அந்தத்தாயின் உள்ளத்தில் எச்சரிக்குமாப்போல் இருக்கிறது. அம்மாவின் சுடுவார்த்தையைத் தாங்கமுடியாத கௌரியின் கண்களிலிருந்து நீர்முத்துக்கள் நிலத்தில் வீழ்ந்து சிதறுகையில் " கௌரி.. இதுக்குப்போய் சின்னப்பிள்ளைமாதிரி ஏன் அழுகிறாய் " என தேவி தேற்றுகையில் " அக்கா..நான் ஒண்டும் கவனமில்லாமல் போட்டு உடைக்கேல்லை. சிமினியை துடைச்சுக்கொண்டிருக்கேக் கை ஏதோ பூச்சிமாதிரிக் கையிலை வந்து விழுந்தது. அதுதான் பயந்துபோய் உதறிஅடிச்சுககொண்டு எழும்பினன் பார்த்தால் ஒரு பெரிய பல்லி". இதைக் கேட்டுக்கொண்டிருந்த செல்லம்மா " என்ன...! கையிலை பல்லி விழுந்ததாமோ ! எனப் பதறிக்கொண்டு வருகிறாள். "ஓம் அம்மா... நீங்கதான் விசயம் விளங்காமல அவளைஏசிப்போட்டியள் ". என்கிறாள் தேவி. தன் தவறைப் புரிந்து கொண்ட செல்லம் " சரி..சாகௌரி இஞ்சைவிடு நான் அந்தக் கண்ணாடித் துண்டுகளைக் கூட்டி அள்ளுறன். நீ போய் பக்கத்து வீட்டுபட பரமக்காட்டை அந்தப் பஞ்சாங்கத்தை ஒருக்கா வேண்டி வாபிள்ளை " எனக் கூறிவிட்டு கண்ணாடித்துண்டுகளைக் கூட்டிஅள்ளுகிறாள். கௌரி சொன்ன குறிப்பின் படியேஅவர்கள் பஞ்சாங்கத்தை விரித்துப்

பார்க்கும் போது ' பெருமரணம் ' என்றிருக்கவே அவர்கள்யாவரின் மனதையும் என்ன நடக்குமோ என்ற அச்ச உணர்வு அரிக்கத் தொடங்குகிறது.

பகலில் ஓயாத வேலைகளாயிருக்கதால் இரவில்தான் பத்திரிகை வாசிக்கும் பழப்பத்தை கடைப்பிடித்தாள் தேவி. இரவில் வாணிக்குப் பாடம் சொல்லிக கொடுத்துவிட்டுப் போத்தல் விளக்கொன்றை எடுத்து வந்து படுத்திருந்து பத்திரிகையை வாசித்துக்கொண்டிருக்கும் போது கடைக்குட்டி வாணி " அக்கா...அக்கா..." எனக் கூக்கிட்டுப் கொண்டு ஓடி வருகையில் கால் இடறிப் போத்தல் விளக்கின்மேல் விழுந்து விடுகிறாள். விளக்கு உடைந்து வாணியினதும், தேவியினதும் உடலில தீப்பற்றிக் கொள்கிறது. "ஐயோ..! அம்மா..! இஞ்சை ஓடி வாங்கோ..." எனத் தேவி அலறுகிறாள். அலறலைக் கேட்டு குசினியிலிருந்த செல்வம், அறையினுள் படித்துக் கொண்டிருந்த ஏனைய மூன்று தங்டிககளும் ஓடிவந்து பார்க்கையில் தீப்பற்றி எரிய தேவி நிலத்தில் வீழ்ந்து துடிக்கிறாள். வாணி செய்வதறியாது அங்கும்மிங்கும் ஓடுகிறாள். இதனால் தீ மேலும் பரவுகிறது. " ஐயோ! நெருப்பு! " "என்ரைபிள்ளை..." "ஐயோ அக்கா...வாணி..." என இவர்களின் கூக்குரலைக் கேட்ட அயவர்கள் வந்து ஒருவாறு தீயை அணைக்கையில் வாணியின் உயிரை அது குடித்து விடுகிறது. தேவியை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்காய் அந்த இரவு வேளையில் வாகனத்திற்கு அலைந்து கடைசியில் எங்கிருந்தோ ஒன்றைப் பிடித்து வந்து அவளை ஏற்றிச்செல்கையில் அவளின் உயிரும் பிரிந்து விடுகிறது. கல்யாண வீடு நடக்க இருந்த வேளை அங்கே கருமாதி வீடாய் மாறிவிடுகையில் அவர்களின் அலறல் யாவரின் மனதையும் நெஞ்சுருக வைக்கிறது. எதிர்பாராத இவ்விழப்புகளால் அவர்கள் யாவரும் தங்கள் கவலைகளைக் கண்ணீரால் கரைக்க முயன்று தோற்றுப்போகின்றனர். அந்தக் போரச் சம்பவம் அவர்களின் மனக்கண்முன்தோன்றி ஆட்டிப்படைக் கிறது.

பக்கத்து வீட்டுப் பரமக்கா ஒரு நல்ல மனுசி. அவள்தான் இவர்களுக்கு அடிக்கடி வந்து ஆறுதல் கூறித் தேற்றுவாள். " செல்லம்...நீ..... இப்பிடியேயிருந்தால் இனி உன்ரை மூன்று பிள்ளை யளின்ரை நிலையென்ன? எழும்பு.. அவர்களுக்காக எண்டாலும் உன்ரை மனதை மாற்ற முயற்சிசெய். இப்பிடியேயிருந்து அதுகளை அனாதையாக்கிப் போடாதை " என்ற அவளின் வார்த்தைகள் அந்தத் தாயின் உள்ளத்தில் ஆணி அடித்தாற் போன்று பதியவே செய்கிறது.

இதனால் தனது கவலைகளையெல்லாம் ஒரு புறம் ஒதுக்கிவிட்டு பழையபடி தன் மூன்று பிள்ளைகளுக்காய் தனது வாழ்க்கையை ஓட்டிச்செல்லும் சாரதியாக மாறும் போது தான் 'இந்த மூண்டு குமருகளையும் என்னண்டு தான் கரையேத்தப் போறனோ என்கின்ற கவலை அவளை அரிக்கத் தொடங்குகிறது. "கடவுளே நீதான் இதற்கொரு வழியைக் காட்டு" என ஆண்டவனிடம் முறையிட்டு அழுகிறாள். அவளின் அழுகுரல் அந்தக்கடவுளின் காதுகளில் விழுந்ததோ இல்லையோ இவளின் மூன்றுவது மகள் லட்சுமியின் காதுகளில் விழவே செய்தன. அவள் எப்பொழுதும் ஆணித்தரமான முடிவுகளையே தீர்மானிப்பாள். எந்தக்காரியத்தையும் அர்த்த புஷ்டியுடனேயே செய்பவள். "அம்மா நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன். எங்கடை கஷ்டமெல்லாம் தீர ஒருவழி தான் இருக்கு. என்ரை இந்த முடிவை நீங்கள் ஏற்காவிட்டாலும் பரவாயில்லை நான் எப்பிடியும் என்ரை இலட்சியத்திலிருந்து தவறமாட்டன்". "பிள்ளை... நீ ... என்ன... ஏதோ பெரிய பீடிகையெல்லாம் போடுகிறாய் ... எனக்கெண்டால் ஒண்டுமாய் விளங்கேல்லை". "சரியம்மா... நான் இனி விசயத்தைச் சொல்லுறன்" என லட்சுமி கூறியதைக் கேட்ட தாய்,தங்கையிருவர் இருந்த இடத்தைவிட்டு துள்ளி எழும்புகிறார்கள். "என்ன ... நீ ...வெளிநாட்டுக்குப்போய் உழைக்கப்போறியோ - " உந்த விசர்க்கதை கதையாதை. உங்கை வெளியிலைபோற பொம்பிளையள் பர்றபாட்டை அறிஞ்சாலே வயித்தைக் கலக்குது". "ஓம் அக்கா நீங்கள் இப்பிடி உழைச்சுத்தான் எங்களுக்கு ஒரு வாழ்வு இருக்குமெண்டால் அந்த வாழ்வு எங்களுக்குத் தேவையில்லை" என அவர்களும் அழுகிறார்கள். எப்பிடியோ இவர்களுக்கெல்லாம் சமாதானம் கூறிவிட்டு வெளிநாடு சென்றுவிட்டாள் லட்சுமி.

இவ்வளவு காலமும் இழந்த இழப்புக்கள் யாவும் ஈடுசெய்யப்பட்டுவிட்டது போன்று அவர்களின் வாழ்வில் இப்போ வசந்தம் வீச ஆரம்பிக்கின்றது. அன்று செவ்வாய்க் கிழமையாதலால் துர்க்காவும்,கௌரியுமாக நித்தியகல்யாணிப்பூவைப் பறித்த மாலை கட்டுகிறார்கள். ஒவ்வொரு செவ்வாய் தோறும் துர்க்கை அம்மனுக்கு மாலைகட்டிக் கொண்டு செல்வார்கள். இத்தனை துயரங்களின் மத்தியிலும் அவர்களின் அயராத கடவுள் பக்தியைப் பார்த்து அந்த ஊரே வியக்கிறது.

துர்க்கா படிப்பு,விளையாட்டு என யாவற்றிலும் கெட்டிக்காரியாகத் திகழ்கிறாள்,

இதனால் தாயின் உள்ளம் பேரானந்தமடைகிறது. "நீ கவனமாய் படிபிள்ளை, நீ எண்டாலும் எங்கடை குடும்பத்திலே படிச்சு ஒரு நல்ல நிலையை அடையவேணு மெண்டதுதான் எங்கள் எல்லாற்றையும் ஆசை" லட்சுமியும் துர்க்காவின படிப்பிற்கு ஆர்வமூட்டி மேலும் படிக்கும்படி அடிக்கடி கடிதம் போடுவாள். அத்துடன் அக்கா கௌரிக்கு எங்கையாவது மணம் பேசி முடிக்கும் படியும் அதற்கான பணத்தை தான் அனுப்புவதாகவும் எழுதியிருந்தாள். எப்படித்தான் இவளுக்கு ஒரு வாழ்வை அமைக்கப் போகிறேனோ என அந்தத் தாயுள்ளம ஏங்கித்தவிக்கையில் கௌரியின் பயபக்திக்கும், அடக்கமான குணத்திற்குமாய் அவ்வூரை சேர்ந்த ஒருவன் அவளைத்தனது மனைவியாக்க முன்வருகையில் யாவும் நன்றே நடைபெற வேண்டுமெனப் பிரார்த்திக்கிறாள் செல்லம். மூத்தமகளின் திருமணத்திற்காய் இருந்த போது நடந்த நிகழ்வுகள் யாவும் அவளைப் பயமுறுத்தியதால் கௌரியின் திருமணத்தை அந்த அம்பாளின் சந்நிதானத்திலேயே வைக்கிறார்கள். அவளின் கருணையால் யாவும இனிதே நிறைவேறுகிறது.

நாளடைவில் கௌரி தாயாகப்போகும் செய்தி கேட்டு அவர்கள் யாவரும் பூரித்துப்போகின்றனர். காலந்தான் எவ்வளவ வேகமாக ஒவ்வொரு மாதங்களாக விழுங்கி விடுகையில் பத்தாவது மாதத்தை வந்தடையவே பிரசவத்திற்காய் மருத்துவமனையில் அட்மிற் பண்ணுகிறார்கள். இவ்வளவு இக்கட்டான நிலையிலும் அங்குள்ளவர்கள் இரவு பகல் பாராது செய்யும் சேவை இவர்களை மெய்சிலிர்க்கச் செய்கிறது. நர்ஸ் லீலா "இப்ப எப்படியிருக்கு ... ஏதாவது வித்தியாசமாய் இருக்கா – என அடிக்கடி வந்து விசாரித்துச் செல்வாள். அவளின் புன்னகை மாறாத முகத்தாலும் கனிந்த வார்த்தைகளாலும் நோயாளர் மத்தியில் ஒரு புது உற்சாகத்தை உண்டாக்கும். இரவு வேளைகளில ஒரு அரிக்கன் லாம்புடன் ஒவ்வொரு வாட்டிற்கும சென்று கதவு தட்டி எழுப்பும் போது முன்னர் படித்த " கூாந டயனல றவைா வாந டயஅி" என்ற நைற்றிங்கேலை ஞாபகப்படுத்துவதாக இருந்தது.

'தலைப்பிரசவம் தாய்க்குக் கண்டம்' என்பார்கள். கௌரியின் நிலைமை மோசமடைகையில் மின்சாரவசதியற்ற நிலையில் ஜெனறேற்றரை இயக்கிச் சத்திரசிகிச்சையை மேற்கொள்ளுகிறார்கள் டாக்டர்கள். அந்தத்தாய் செல்லம்மா வாயிற்கதவுருகே நின்று வேண்டாத தெய்வங்களில்லை. அப்போதெல்லாம் நர்ஸ் லீலா தான் "அம்மா ஒன்றுக்கும் யோசிக்காதீங்கோ கடவுள் கைவிடமாட்டார்" ஆறுதல் கூறுகிறாள்.

ஆனால் கௌரியின் வயிற்றை வெட்டி குழந்தையை எடுத்து விடுகையில் ஜெனறேற்றரும் கோளாறு காரணமாய் திடீரென நிற்கவே கௌரியின் இதயத்துடிப்பும் நின்றுவிடுகிறது. அவள் தனக்காக ஒரு ஜீவனை அதுவும் தன்னைப்போல் ஒரு பெண்ணை இவ்வுலகில் விட்டுச் செல்கிறாள். இப்பிஞ்சுக் குழந்தையின் அன்னையை மட்டுமா இறைவன் பறித்தார். இல்லை ... இல்லை ... இவளது தந்தை வேலைக்காய் அலுவலகம் செல்லும் போது போகும் வழியிலேயே பொம்பரின் குண்டு ஒன்றிற்கு இரையாகிவிடுகிறார். இதனால் இப்பெண் இவ்வுலகில் அவதரித்து ஒருமாதம் முடியுமுன்பே தாய், தந்தையை இழந்த அனாதையாகிவிடுகிறாள். கடவுளே இவர்களை ஏமாற்றிவிடுகிறார். "இனி நான் என்ன செய்வேன். இக்குழந்தை வளர்ந்து தனது அம்மா எங்கே- அப்பா எங்கே- என்றால் என்ன பதில் சொல்வேன். கடவுளே இந்த ஏழையை ஏன் இப்படி சோதிக்கிறாய். நான் என்ன பாவம் செய்தேன் " என அடித்துப் புலம்புகிறாள்.

குழந்தை வினோவின் அலறல்கேட்டு ஓடிவருகிறாள் செல்லம். அவசர அவசரமாய் பீடிங்பொற்றிளில் பாலை ஊற்றி எடுத்துவந்து அந்தக் குழந்தையின் வாயில் வைத்துவிடவே அதன் அழுகை நின்று ஆவலுடன் பாலைக்குடிக்கிறது. "துர்க்கா ... " "என்னம்மா ..." என ஓடிவந்தவளிடம் "இந்தா ... பிள்ளையை ஒருக்கா வைச்சிரு. அடுப்பிலை எனக்கு வேலையிருக்கு என அவளிடம் கொடுத்துவிட்டுச் செல்கிறாள். அப்போது வாயில் சைக்கிள் மணிச்சத்தம் கேட்கவே ஓடிச்சென்று வாங்கிய கடிதத்தை பிரித்துப் படித்தவளின் கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றன. கட்டுக் கொள்ளாச் சந்தோசத்துடன் "அம்மா ... அம்மா ... லட்சுமியக்காவிற்கு இண்டைக்கு பிள்ளையிற்றாம். வாறகிழமை மட்டிலை இவ்விடம் வருவாவாம்" எனக் கூறிய துர்க்கா சந்தோசம் தாங்காது "வினோக்குட்டி ... உனக்கு ... இன்னொரு அன்ரி வரப்போறாவே" எனக்கூறுகையில் அதுவும் தனது பொக்கை வாயைத் திறந்து ஒரு சிரிப்பை உதிர்க்கிறது.

"அம்மா ... அப்ப நாளைக்கு வீட்டையெல்லாம் ஒருக்கா தூசிதட்டிக் கழுவ வேண்டும்". "ஓம் பிள்ளை, அதோடை ... அந்தக் கதிரைகளுக்கும் ஒரு நல்ல துணிவாங்கிப் போடவேணும். பிள்ளைக்கு பயித்தம் பணியாரம எண்டால் நல்ல விருப்பம். அதுவும் கொஞ்சம் சுட்டு வைப்பம்" எனச் செல்லம்மா கூறுகிறாள். இப்படியாகப் பலதும் செய்துவிட்டு இவ்வளவு நீண்டகால இடைவெளிக்குப் பின்பு அவளின்

வருகைக்காய் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில் பக்கத்திவீட்டு பரமக்கா "செல்லம்மா ... பிள்ளை துர்க்கா ..." , "என்னமாமி ..." எனக்கேட்கவே "பிள்ளை என்ரை மகன் இப்பத்தான் கொழும்பாலே வந்தவன். அவனோடை தான் பிள்ளை லட்சுமியும் வந்தவளாம். ஆனால் ... " "என்னக்கா ஆனால் ... சொல்லுங்கோ" எனப்பதறுகையில் "பிள்ளை லட்சுமியை வவுனியாவிலே சந்தேகத்தின் பேரிலே பிடிச்சுப்போட்டாங்களாம்." எனக்கூறவே இச்செய்தி அவர்களின் காதுகளில் இடியாய் விழவே மயக்கமுற்று வீழ்கிறாள் செல்லம். "அம்மா ... என்னம்மா ... எங்களைவிட்டு போயிடாதீங்கம்மா ... எங்களை அனாதையாக்கி விடாதீங்கம்மா ... " என துர்க்கா அலறிக் கொண்டே சிறிது தண்ணீர் கொண்டு வந்து தாயின் முகத்தில் தெளிக்கிறாள். தாய் கண்விழித்துப் பார்க்கையில் தான் அவளிற்குத் தனது உயிரே மீண்டு வந்தது போன்று இருக்கிறது. "கடவுளே என்னை ஏன் இன்னமும் உயிரோடை வைச்சிருக்கிறாய்- " என அலறுகிறாள் செல்லம். அவர்கள் எவ்வளவோ முயன்றும் லட்சுமியை வெளியில் எடுக்க முடியவில்லை. இப்போ அவள் உயிருடன் இருக்கிறாளா என்பது கூடத்தெரியாத நிலையில் தவிக்கிறார்கள்.

இக்கொடூரச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட துர்க்கா தனிமையிலிருந்து யோசிக்கத் தொடங்குகிறாள். அக்காவை இருவரினதும், தங்கை வாணியினதும் மரணத்திற்கெல்லாம் காரணம் மின்சாரமின்மையே. இங்குள்ள சீரற்ற நிலையினால்த்தானே ஏதுமறியா அக்கா லட்சுமியை ஏன் கைது செய்தார்கள். என்றெல்லாம் இதன் காரணங்களை ஆழ்ந்து சிந்திக்கிறாள். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவளாய் இவ் அநியாயத்திற்கு காரண கர்த்தாக்களை விடப்போவதில்லை என எண்ணியவள் "தன்னைத் தேடவேண்டாம்" என விளக்கி ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டு வீட்டை விட்டுப் புறப்பட்டுச் செல்கிறாள். எந்த முகூர்த்தத்தில் இவளுக்கு இப்பெயரை இட்டார்களோ, அதே துர்க்கை அம்பாள் போன்றே ஆயுதமேந்திச் சமரிட்டுக் கொண்டிருக்கையில் எதிரியின் துப்பாக்கிச் சன்னமொன்று அவளின் இதயத்தை ஊடறுத்துச் செல்கையில் வீரமரணத்தைத் தழுவிக் கொள்கிறாள்.

இவ்வாறான தொடர்ந்து இழப்புக்களால் இளைத்துப் போகிறாள் செல்லம்மா. "கடவுளே இனி நான் என்ன செய்வேன், எண்ணுக்குப் பெத்து மண்ணுக்குக் கொடுத்த மாதிரி அஞ்சு பிள்ளையளைப் பெத்து அந்த அஞ்சையும் பறிகொடுத்துவிட்டுப் பரிதவிக்கும் பாவியாக்கிவிட்டாயே. அதோடை இந்தத் தள்ளாத வயதிலே நான் எப்படி இந்தப பிஞ்சுக் குழந்தையை வச்சுக் காப்பாற்றப்போறன்" எனப்புலம்பிக் கொண்டிருந்த செல்லம் இந்த இழப்புக்களின் தாக்கத்தினாலும் வயதுத் தளர்ச்சியினாலும் சோர்வடைந்து நோய்வாய்ப்படுகிறாள். இந்தக் குழந்தை வினோவை என்ன செய்வேன் . அது அநாதையாய் போய்விடுமே என்ற கவலையும் அவளை வாட்டிக் கொண்டிருந்தது. "ஆண்டவனே நீதான் இதற்கு ஒரு வழியைக் காட்டு" எனப் பிரார்த்திக்கிறது அவளின் உள்ளம். இப்படியாக ஒரு நாள் புலம்பியபடியே குழந்தையையும் அணைத்தபடி அப்படியே உறங்கிப் போகிறார்கள இருவரும். "அம்மா ! ..." என்ற வினோவின அலறலைக்கேட்டு துடித்து எழுகிறாள் செல்லம். "என்ன பிள்ளை ... என்ரை குஞ்சு ஏதாவது கனவு கண்டனியா ... " என அவளைத் தூக்கித்தனது மடியில் அமர்த்துகிறாள். "அம்மம்மா ... அம்மம்மா ... அதோ அந்தப் படத்திலே இருக்கிறமாதிரி ஒரு அம்மா வந்து நான் தான உனக்கு அம்மா எண்டு சொல்லி எனக்குப் பால்,பழம் எல்லாம் தந்தா அம்மம்மா ... " என அம்பாளின் படத்தைத் தனது ஆள்க்காட்டி விரலினால் சுட்டிக் காட்டுகிறாள். செல்லம்மாளின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. அவளது மூளை வேலை செய்யத் தொடங்குகிறது. "தாயே நீ தான் எனக்கு ஒரு வழியைக காட்டிவிட்டாயே" என்றவள் மறுநாள் விடிந்ததும் அந்த வினோவையும் ஒரு கையில பிடித்துக்கொண்டு விரைந்து செல்கிறாள். சென்றவள் அந்த நதுர்க்கா மகளின் இல்லத்தில் தனது பேத்தியை ஒப்படைத்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சுடன் திரும்பிக் கொண்டிருந்தவள் நெஞ்சு வலிக்கவே நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அப்படியே ஒரு மரத்தின் கீழ் அமர்கையில் அவளின் மூச்சு நின்றுவிடுகிறது.

யாவும் கற்பனை

எழுதியவர் ஏழாலையூர் ச.கெங்கேஸ்

அலைஓசை

ALAI OSAI

Tamil English Science & cultural Magazine
தமிழ் ஆங்கில விஞ்ஞான கலாச்சார சஞ்சிகை

அலை 8 ஓசை 1 தை - மாசி 1993

# சமாதானமும் சுதந்திரமும்

1992 இல் அரசின் பொருளாதார, போக்குவரத்து மற்றும் பல தடைகளாலும் பல கசப்பான அனுபவங்களுடன் தமிழீழப்பகுதிகள் தம்மைத் தாமே சுதாகரித்துக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு அவற்றில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது எனலாம். கடந்த ஆண்டு அரச படைகளினதும் படைத்தலைமைகளினதும் பேரிழப்புக்கள் சிங்கள அரசை வெகுவாக உலுக்கி விட்டது குறிப்பிடத்தக்கது. கிளாலியில் நடைபெற்ற அனர்த்தம் அரசின் இயலாத்தன்மையின் விரக்திதை எடுத்துக் காட்டுகின்றது. இனப்படுகொலையே அரசின் ஒரே குறிக்கோள் என்பது தெட்டத் தெளிவாகி விட்டது. சிங்கள பௌத்த தலைவர்களும் சமஷ்டி கொடுத்தாலே ஈழம் கொடுத்ததற்குச் சமம் எனக் கடும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் வெளிநாடுகளின் அழுத்தமும் சர்வதேசத் தமிழர்களின் ஒன்று பட்ட தொடர்ச்சியான பங்களிப்புமே ஈழத்தில் அமைதியைத் தோற்றுவிக்கும் எனலாம்.

சமாதானத்தூதுவராகச் சென்ற கிட்டுவும் இந்தியப் படையின் துரோகத்தனத்தால் அக்கிரமமான முறையில் கொல்லப்பட்டார். 1993 இன் ஆரம்பம் தமிழ் மக்களுக்குப் பெரும் பாதகமான நிலைகளையே ஏற்படுத்தி உள்ளது. இனிவரும் காலத்திலாவது நல்லது நடக்கும் சமாதானம் பிறக்கும் என எதிர்பார்ப்போம்.

ஆசிரியர்கள்- பால ரவீந்திரன், க.ஜெயக்குமார்
உதவி ஆசிரியர்- சி.ந.ரகுராம்
நிருபர்கள்- க.மேகநாதன் சிறப்பு நிருபர் (அவுஸ்திரேலியா)
வி.அரவிந்தன் (அவுஸ்திரேலியா) க.கேதீஸ்வரன் (கனடா)
கு.சிந்து (நோர்வே) சு.கருணாநிதி (பாரிஸ்) ஆர் கருணாகரன் (டென்மார்க்)

அலுவலகம்- Alai Osai Publications,
Waltham Forest Thamil Sangam
First Floor, 107 Hoe Street,
Walthamstow London E17 4SA

**PUBLISHERS:- Waltham Forest Thamil Sangam**

# PARAM & CO

**SOLICITORS**

***Solicitors for all your legal requirements***

*★ Civil Litigation ★ Divorce and family matters ★ Immigration*
*★ Crime ★ Personal injury cases ★ Motoring offences*
*★ Wills probate ★ Conveyancing and international transactions*

**S.PARAMALINGAM B.A, LLM.**

**6, Springfield Mount,**
**Kingsbury,**
**London NW9 0SR**
**TEL: 081 - 200 3500**
**FAX: 081 - 200 1360**

# JAFFNA TRADE CENTRE

* Groceries
* Fresh Vegetables
* Frozen Sea Food
* CD's
* Video Tapes (Tamil & Malayalam)
* Audio Cassettes
* Sri Lankan News Papers

69 Forest Road
Walthamstow
London E17 6MF
Tel: 081 - 523 5922

# ACUPUNCTURE AND HERBAL THERAPY

முதுகுவலி, மூட்டு வாதம், நாட்பட்ட சரும நோய்கள்
ஒற்றைத் தலைவலி, மண்டைப்பீனிசம்,
மாதவிடாய்க் கோளாறுகள், மனச்சோர்வு,
நித்திரையின்மை, புகைத்தல் போன்ற நிலைகளுக்கு
உடனடி நிவாரணம் பெற

Dr. N. S. MOORTHY

105A, UPPER TOOTING ROAD,
TOOTING
LONDON SW 17 7TW.
☎ 081- 682 3876

நோயாளர்களைப் பார்வையிடும் நேரம்
செவ்வாய், வெள்ளி மாலை 6.00 மணிமுதல்

# மிருதங்கம்

"சொஹசொஹா ம்ருதங்க தாளமு" என்று தியாகப் பிரம்மம் மிருதங்கத்தின் தன்மையை ஒரிடத்தில் குறிப்பிட்டுள்ளார். இசைக்கச்சேரிகளின் போது வாசிக்கப்படும் மிருதங்கமானது கேட்போர் செவிகளிலும் மனதிலும் மிருதுவான சுக அனுபவத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்று கூறி இருக்கிறார்.

தாள வாத்தியக் கருவிகளில் முக்கிய இடத்தைப் பெறுவது மிருதங்கம் ஆகும். சிலப்பதிகாரத்தில் 30 வகையான தோற்கருவிகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. வன்மையான ஓசைகள் அடைய கருவிகள் 14. மென்மையான ஓசைகள் உடைய கருவிகள் 12. வன்மையும் மென்மையும் இன்றிச் சமமான ஓசைகள் உடைய கருவிகள் நான்கில் சிறந்த வாத்தியக் கருவி மிருதங்கம் ஆகும். மத்தளம் மிருதங்கம் இவை இரண்டும் உருவ அமைப்பிலும் கையாளும் முறையிலும் ஒரே விதமேயானாலும் ஓசையில் மட்டும் வேறுபாடு உண்டு. ம்ருத் + அங்கம், அதாவது மண்ணால் செய்யப்பட்ட உறுப்பைக்கொண்ட கருவி மிருதங்கம் என்று கருதப்பட்ட காலமும் உண்டு. இப்போதும் கிருஷ்ண பஜனையின் போது வாசிக்கப்படும் "கோல்" எனப்படும் கருவி மண்ணினால் ஆக்கப்பட்டது.

இன்று மிருதங்கம் பலா, திருக்கொண்டல் முதலிய மரங்களினால் செய்யப்படுகின்றது. குறைந்த அளவு 18 அங்குலத்தில் இருந்து 24" அல்லது 26" வரையிலுள்ள உயரத்திற்கு மிருதங்கங்கள் செய்யப்படுகின்றன. மந்தரஸ்தாயி என்று சொல்லப்படுகின்ற கீழ் சுருதியில் பாடுவோருக்கு ஏற்ற விதமாக 1/2, 3/4, 1, 11/2, 2,21/2, 3 என்ற சுருதிகளில் மிருதங்கங்களும் 4, 41/2, 5, 51/2, 6 என்று ஹெச்சுஸ்தாயி அதாவது மேற்சுருதியிலும் மிருதங்கங்கள் செய்யப்படுகின்றன. பாடுவோர்கள் ஆதாரமாக வைத்துக் கொள்ளும் மத்தியஸ்தாயி ஷட்ஜமத்திற்கே மிருதங்கம் சுருதி சேர்க்கப்படும்.
மிருதங்கத்தின் இரு புயமும் சுமார் 9 அங்குலங்கள் விட்டம் இருக்கும். உள்ளே கூடாக இருக்கும். இடத்தலையும் வலத்தலையும் தோல்களினால் மூடப்பட்டிருக்கும். இவற்றை இணைக்க உறுதியான வார் உண்டு. வலது பக்கத்திற்கு வலத்தலை என்றும் இடது பக்கத்திற்கு இடத்தலை என்றும் சொல்லுவார்கள். வலத்தலை 3 விதமான தோல்களினால் மூடப்பட்டிருக்கும். கண்ணால் காண இயலாத மிகவும் உட்புறத்தில் உள்ள தோலுக்கு "உட்கரைத்தட்டு" என்றும் அதற்கு மேல் உள்ள வளைவான தோல் வட்டத்திற்கு "சாப்புத்தோல" அல்லது "கொட்டுத்தட்டு" என்றும் சொல்லப்படும்.
அனேகமாக இவை ஆட்டுத்தோலினால் செய்யப்படும். வலத்தலையின் மையத்தில் சிறு வட்டமாகக் கறுப்பு நிறமுடைய சோறு அல்லது கரணை என்ற ஒரு வகைக் கற்பொடி தடவப்பட்டிருக்கும். இது புளியஞ்சாறு, வெந்த சோறு, மங்கனீஸ், அல்லது இரும்புப்பொடி மூன்றும் சேர்ந்த ஒரு கலவையாகும். கரணையின் மையப்பகுதி கொஞ்சம் தடிப்பாகவும் பக்கங்கள் படிந்தும் காணப்படும். இதை அவ்வப்போது ஒரு தனி வகைக் கல் கொண்டு தேய்த்து ஒழுங்கு படுத்த வேண்டும். இந்தப்பகுதி தான் மிருதங்கத்திற்கு கணீர் என்ற ஒலியையும் பெரும் முக்கியத்துவத்தையும் கொடுக்கின்றது.

இடது பக்கத்திற்கு "தொப்பி" என்று பெயர். இது இரண்டு விதமான ரோல்களினால் மூடப்பட்டிருக்கும். உள் வட்டம் ஆட்டுத் தோலினாலும் வெளிவட்டம் எருமைத்தோலினாலும் ஆனது. நிகழ்ச்சி தொடங்கு முன்னர் தொப்பியின் நடுவில் ரவையை நீருடன் கலந்து பிசைந்து தடவுவது வழக்கம். இது மிருதுவான தொம் என்னும் நாதத்தை எழுப்புவதற்கு மிகவும் துணையாக இருக்கும். நிகழ்ச்சி முடிந்ததும் ரவையைச் சுரண்டிஎடுத்து விட வேண்டும்.

மிருதங்கத்தின் வலப்பக்கத்தை ஆதரை சுருதிக்குச் சரியாகச் சுருதி வேர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு சுருதி சேர்ப்பதற்குக் கல்லும் "புன் " என்று சொல்லப்படும் 2 அல்லது 3 அங்குலமான மரத்துண்டும் பணன்படும். மூட்டின் மேல் புள்ளை வைத்துத் தட்டினால் சுருதி அதிகமாகவும் மூட்டின் கீழே புள்ளை வைத்து மேற்பக்கமாகத் தட்டினால் சுருதி குறைந்தும் காணப்படும். மிருதங்கத்தின் நீளமும் பருமனும் அதிகமாக இருந்தால் அது குறைந்த சுருதிப் பாடகருக்குத் தான் (ஆண்கள்) பயன்படும். நீளமும் பருமனும் எவ்வளவுக்குக் குறைவாக இருக்கிறதோ இது அதிக சுருதிப் பாடகருக்குப் (பெண்கள்) பொருந்தும்.

இக்கலையில் மேன்மையடைவதற்குக் குருபக்தியும் இறைபக்தியும் கடும் பயிற்சியுமே மிகவும் முக்கியமானவையாகும்

முத்து சிவராஜா

# வாசகர் கடிதங்கள்

அட்டைப்படங்களும் உள்ளேயுள்ள படங்களும் வடக்கின் இன்றைய நிலைமையைத் துலாம்பாரமாகக் காட்டின.

- மணிமேகலை அல்பேட்டன்

ஆசிரியரின் பயணக்கட்டுரை யாழ்ப்பாணம் சென்று வந்தது போல் ஓர் பிரேமையை ஏற்படுத்தியது. இனி எங்கே யாழ் போவது என நினைத்த எனக்கு உடனும் யாழ் போக வேண்டும் என்ற உணர்வை ஆசிரியர் ஏற்படுத்தி உள்ளார். நன்றி ஆசிரியரே

- கருணைகரன் பாரிஸ்

ஆசிரியரே, கேட்கிறேனென்று குறை நினையாதீர்கள். எத்தனை பவுண்கள் அங்கு கட்டினீர்கள்? அதுகளைப்பற்றியும் சொன்னால் தானே நாங்களும் றெடியாகப் போகலாம்?

- ஜனார் ஈஸ்ட்ஹாம்

ஆசிரியரே, மாணவனாக இருந்த நான் இனி எங்கே யாழ்ப்பக்கம் நினைத்துப் பார்ப்பது என எண்ணித்தான் அண்மையில் அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பித்தும் விட்டேன். ஆனால் உங்கள் கட்டுரை வாசித்த பின்னரே எனது அவசரத்தை எண்ணி வருந்துகிறேன். எல்லாம் விதிப்படி தான்.

- உமாசங்கர் ஹரோ

ஓய் ஆசிரியரே நீர் எடுத்தது படங்களா அன்றிப் போட்டோக்கொப்பியா? என்னையா விசயமான படங்கள் எல்லாம் கிளியர் இல்லாமல் இருக்கிறது.

- பாலமனோகரன் சவுத்தோல்

பங்கயமணாளனின் சரஸ்வதியும் இலக்குமியும் கட்டுரை வாழ்வின் வேதனையான பகுதிகளின் சுவடுகளை ஆழப்பதித்தது போல் ஓர் உணர்வை ஏற்படுத்தியது. தோழரே சிலரை என்றும் திருத்தவே முடியாது. அவர்கள் தூங்குவது போல் நடிப்பவர்களுக்குச் சமானமானவர்கள்

- திருமதி வாகினி நாகேந்திரன்

லண்டன் செய்திகள் இலங்கைச் செய்திகள் போதியளவு பிரசுரித்துள்ளீர்கள். நன்றிகள். தொடர்ந்தும் பிரசுரியுங்கள்

வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கத்தின் பெண்கள் தின விழா, உதைபந்தாட்டப் போட்டி படங்கள் விமர்சனங்கள் கண்டு இத்தகைய தமிழ்ச்சங்கத்தின் பரந்து பட்ட சேவை கண்டு வியந்தேன். சங்கங்கள் உருவாக்கியே சண்டை போடும் இந்த லண்டன் மாநகரில் உங்கள் சங்கம் ஓர் முன்மாதிரியே. அதையுருவாக்கி யவர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் எமது பாராட்டுகள்.

- தாமோதரம் வெம்பிளி

அன்பு ஆசிரியரே,

இன்றைய காலகட்டத்தில் தாயக விடுதலை, பண்பாடு பற்றிய எத்தனையோ கதைகள், கட்டுரைகள் எழுத வேண்டிய காலகட்டத்தில் சாண்சீலை போன்ற கதைகள் தேவை தானா? எழுத்துலகில் அனுபவம் மிக்க நீங்கள் இவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். நன்றிகள். - தனம் ஹரோ

ஆசிரியருக்கு

புலம் பெயர்ந்தோர் நலம் பெற பல ஆலோசனைகள் தந்துள்ளீர்கள். எம்மீது அக்கறை கொண்டு இவற்றிற்கும் தங்கள் மலரில் இடம் ஒதுக்கியமைக்கு நன்றிகள். தொடர்ந்தும் இப்படிப்பட்ட செய்திகளைத் தந்து உதவுவீர்களாக.

-தர்மராசா றொற்றினம்

ஆசிரியருக்கு

அலை ஓசை இதழ் மாதாமாதம் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். இத்தகைய பெரிய தமிழ்ச்சங்கத்திற்கு இது ஒரு பெரிய வேலையா? வாசகர்கள் நாமிருக்க உங்களுக்குப் பயமேன்? -பரமேஸ்வரன் ஈஸ்ட்ஹாம்

# Golden Printers

**120 Palmerston Road, Walthamstow, London E17 6PZ**
**TEL : 081 - 509 0509 FAX : 081 - 509 0509**

**We Undertake the following work at reasonable rates:**

- **Compliment Slips**
- **Wedding Cards**
- **Posters**
- **Letter Heads**
- **Business Cards**
- **Leaflets**
- **Invitation Cards**
- **Raffle Tickets**
- **Souvenirs**
- **Magazines**
- **Rubber Stamps**

தமிழிலும் ஆங்கிலத்திலும்
சஞ்சிகைகள், திருமண அழைப்பிதழ்கள்,
வியாபார விளம்பரங்கள், டிக்கற்றுக்கள், துண்டுப் பிரசுரங்கள்
உங்கள் விருப்பத்திற்கேற்ற முறையில் குறுகிய நேரத்தில்
அழகுற அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

# PALM RESTAURANT

A TASTE OF PARADISE
SRI LANKAN CUISINE

Serving the largest selection of Traditional Sri Lankan & South Indian Fresh Food in the area.



SPECIALITY
FRESH SEA FOOD
FRESH VEGETABLE
SRI LANKAN LAGER & MANY MORE

YOU SHOULD TRY OUR SPECIAL SRI LANKAN DISHES ON YOUR NEXT VISIT TO WALTHAMSTOW

**102 PALMERSTON ROAD**
**WALTHAMSTOW, LONDON E17**
**TEL: 081 - 520 7465**

OPENING HOURS
Tuesday - Saturday
12 noon - 3 p.m. 6p.m.- Midnight
Sunday 12 noon - 3pm. 6pm - 11.30pm

For All Legal Services
&
Advice


Contact

# Ranjit & Co

176, Mitcham Road
Tooting
London SW17 9NJ

Tel: 081 - 767 9717
Fax: 081 - 767 9684

Ground Floor
107 B Hoe Street
Walthamstow
London E17 4SA
Tel: 081 - 521 5757
Fax: 081 -521 5757



Capital Autos
VW AUDI Specialists
307 - 311 SPROWSTON MEWS, FOREST GATE E7
(Rear of 311 Romford Road)
Telephone: 081 - 519 3041 081 - 519 6187
Mobile: 0860 485 247 0860 570 031
RAT III R
Specialist in
Audi Second hand Spares
Servicing Electronic Tuning
Pre - MOT Checks, All Mechanical &
Accident Repares, Resprays, Welding